விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 புரட்டாதி 30 முஹற 20 இதழ் 244
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 16-10-84

## 94 தமிழக மீனவர் பிரச்னை

# 20 பேர் றிமாண்டில்! 74 பேர் பாதுகாப்பில்!!

[கொழும்பு]

இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறிப் பிரவேசித்தார்களென்ற குற்றச் சாட்டின்பேரில் கடற்படையினரால் கைப்பற்றிக்கொண்டுவரப்பட்ட 17 படகுகளில் தமிழக மீனவர்கள் இருபது பேர் றிமாண்டிலும், மிகுதி எழுபத்திநான்குபேர்பாதுகாப்பிலும் வைக்கப்பட்டனர்.

அனுராதபுரம் மேல்நீதிமன்றத்தில் நீதிபதி திரு ஆனந்த குமாரசாமி முன்னிலையில், கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 94 தமிழக மீனவரும் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர்.

இலங்கை கடற்படையினரால் பதினேழு படகுகளும், 94 மீனவர்களும் கைப்பற்றப்பட்டு தலைமன்னார் துறைமுகத்துக்குக் கொண்டுவரப்பட்டது தெரிந்ததே. கைப்பற்றப்பட்ட 17 படகுகளின் காப்டன்களும் மற்றும் மூவரையும் றிமாண்டில் வைக்கும்படி நீதிபதி உத்தரவிட்டார்.

மிகுதி 74 பேரையும் அவர்

(5-ம் பக்கம் பார்க்க)

## எந்தநேரத்திலும் அமெரிக்காவில் சிகிச்சை

# எம். ஜி. ஆரை கொண்டுசெல்ல விமானம் காத்து நிற்கிறது!

(சென்னை)

சென்னையிலுள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வரும் தமிழக முதல்வர் திரு எம். ஜி. ராமச்சந்திரனை, எந்தநேரத்திலும் சிகிச்சையளிப்பதற்கு அமெரிக்கா கொண்டுசெல்வதற்கு மத்தியஅரசின் விமானமொன்று தயார்நிலையில் காத்து நிற்கிறது. இந்த ஏற்பாட்டை பிரதமர் திருமதி இந்திரா காந்தி மேற்கொண்டுள்ளார். எம். ஜி. ஆர். சுயநினைவோடு இருப்பதாகவும், கை, கால்களை அவர் அசைக்கிறார் எனவும் தமிழகஅமைச்சர் நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

முதல் அமைச்சரின் உடல்நிலை ஓரளவுக்கு நிலைப்படுத்தப்பட்டுள்ளது. அவர் சுயநினைவோடு இருக்கிறார் கைகால் அசைவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. சிகிச்சைக்காக அமெரிக்க டாக்டர்கள் 4 பேர் வருகிறார்கள் அவசரநடவடிக்கைமேற்கொள்வதற்கு அமைச்சரவை உபகுழு நியமிக்கப்பட்டுள்ளது.

முதல் அமைச்சரின் சிகிச்சைக்குத் தேவைப்படும் எத்தகைய உதவியும் அளிக்கப்படுமென்று பிரதமர் திருமதி இந்திரா காந்தி கூறியுள்ளார்

முதல் அமைச்சரின் உடல் நலம் தேறவேண்டுமென்று சட்டமன்றங்களின் இருஅவைகளும் தீர்மானங்கள் இயற்றியுள்ளன இரு அவைகளும் இன்று மறுதிகதி குறிப்பிடாமல் ஒத்திவைத்தன.

தமிழக முதல்வருக்கு சிகிச்சைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு அவரது உடல் நிலை ஓரளவு நிலை நிறுத்தப்பட்டுள்ளதாக நிதி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் நேற்றுச் சட்டப்பேரவையில் தெரிவித்தார்.

கடந்த சனி இரவு மூளையின் உட்பகுதியில் ஓர் இரத்தக்கட்டி ஏற்பட்டதாகவும். இதனால் உடலின் வலப்பாகம் ஓரளவு இயங்கவில்லையென்றும், இப்போது சிகிசசை

[5ம் பக்கம் பார்க்க]

## வடக்கு கடலில் ஊரடங்கு

# வானொலிச் செய்தி சரியல்ல என்கிறார் யாழ். அரச அதிபர்!

(யாழ்ப்பாணம்)

வடபகுதி கடல் பகுதிகளில் 'ஊரடங்குச் சட்டம்' பற்றி வானொலியில் ஒலிபரப்பப்பட்ட செய்தி குறித்து யாழ், அரசாங்க அதிபர் திரு. பஞ்சலிங்கம் நேற்று வடபகுதி இணைப்பு அதிகாரி திரு. நளின் செனிவரத்தினவுடன் தொடர்பு கொண்டார் இதனைத் தொடர்ந்து அமைச்சர் லலித் அத்துலத்முதலியுடன் தொடர்பு கொண்ட பின்னர் யாழ். அரசாங்க அதிபருக்குக் கிடைத்த தகவலின்படி, அவ்விதம் வானொலியில் வெளியான

(5-ம் பக்கம் பார்க்க)

## டிசம்பர் முதல்வாரத்தில்

# யாழ். நகருக்கு தீயணைக்கும்படை!

(யாழ்ப்பாணம்)

'தீயணைக்கும்படை' டிசம்பர் முதல் வாரத்தில் யாழ் நகர் வந்து சேருமென எதிர்பார்க்கப்படுவதால் இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது,

தீயணைக்கும்படை நிதிக்கு யாழ். மாநகரசபை ஊழியரையும் நிதிவழங்குமாறு வேண்டுகோள்விடுக்கப்பட்டுள்ளது.

மாநகரசபை ஊழியரிடமிருந்து சுமார் 50,000 ரூபா நிதிகிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

தீயணைக்கும் படைக்கான கட்டடம் ஒன்றை அமைக்க ரெண்டர் கோரப்பட்டுள்ளது. மாநகரசபைக்குப் பின்பகுதியில், கன்கிறிட் தூண்கள் அமைக்கும் பகுதி பாஷையூருக்கு மாற்றப்பட்டுள்ளதால், அந்த இடத்தில் தீயணைக்கும் படைக்கான கட்டிடத்தை அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (க)

## இன்று நடக்கும் முக்கிய மாநாடு

(கொழும்பு)

அண்மையில் கடற்படையினரால் மன்னாரில் வைத்து கைப்பற்றப்பட்ட 94 மீனவர், 17 வள்ளங்கள் தொடர்பான மாநாடொன்றை அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா இன்று கொழும்பில் கூட்டுகிறார். (சூ)

## ரூ. 112 கிடைக்கும்

(கொழும்பு)

ஓய்வூதியம் பெறுபவர்கள் ஒவ்வொருவருக்கும் நவம்பர் மாத ஓய்வூதியத்தில் 112 ரூபா மேலதிகமாக வழங்கப்படவுள்ளது.

செப்டம்பர், அக்டோபர் மாத வாழ்க்கைச்செலவுப்படியாகவே இந்த மேலதிக 112 ரூபா வழங்கப்படவுள்ளதாக ஓய்வூதியத் திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்தார்.

## பிரதமர் மீண்டும் வற்புறுத்து

# பயங்கரவாதத்துக்கு இந்தியா ஆதரவு!

(கொழும்பு)

பயங்கரவாதிகளுக்கு இந்தியா ஆதரவளிப்பதனால் தான் அதனை இந்நாட்டிலிருந்து ஒழிப்பது மிகவும் முட்டுக்கட்டையாக இருக்கிறதென உலகநாடுகள் நம்புவதாக பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா நேற்றுக் கூறினார்

கட்டுக்கம்பளையில் நடந்த கூட்டமொன்றில் பேசுகையிலேயே அவர் இப்படிச்சொன்னார்.

எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா சமீபத்தில் விடுத்த அறிக்கையொன்றில் இந்தியா ஆதரவளிக்கிறது என்பதனைத்தெரி

[5ம் பக்கம் பார்க்க]

# கிராமிய வங்கிகள் மூலம் பென்ஷன்பெற விருப்பம்!

[யாழ்ப்பாணம்]

கிராமிய வங்கிகள் மூலம் ஓய்வூதியம் பெறவிரும்புபவர்கள் தொகை அதிகரித்துள்ளது, இதுவரை 700பேர் கிராமிய வங்கிகள் மூலம் ஓய்வூதியம் பெறவிருப்பம் தெரிவித்துள்ளனர்

தபாலகங்கள் மூலம் ஓய்வூதியம் பெற்றவர்கள் நேற்று முதல் குருநகரில் ஓய்வூதியம் பெற்றுவருகின்றார்கள்

இவர்களுக்கு கிராமிய வங்கி

(5-ம் பக்கம் பார்க்க)

# துப்பாக்கி முனையில் மாங்குளத்தில் கொள்ளை!

(யாழ்ப்பாணம்)

மாங்குளம் தேசிய வீடமைப்பு இலாகாவில், துப்பாக்கி முனையில் ரோனியோ யந்திரம், தட்டச்சு யந்திரம், றேடியோ கொள்ளையடிக்கப்பட்டுள்ளது

காரியாலய நேரத்தில் அங்கு வந்த 6 இளைஞர்கள் ஊழியர்களை எச்சரித்துவிட்டு இக் கொள்ளையை நடத்தியதாகக் கூறப்படுகிறது

இளைஞர்கள் வான் ஒன்றில் வந்ததாகக் கூறப்படுகிறது.

இச் சம்பவத்தைத் தொடர்ந்து மாவட்ட வீடமைப்பு முகாமையாளர் வவனியா விசேடபொலிஸாரினால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். (க)

## ஜனாதிபதியை அனுரா சந்தித்தார்

(கொழும்பு)

எதிர்க்கட்சித்தலைவர் திரு அனுரா பண்டாரநாயக்கா ஜனாதிபதி திரு. ஜே ஆர். ஜெயவர்த்தனவை நேற்றுச் சந்தித்துப்பேசினார். சர்வகட்சி மாநாடு தொடர்பாக இந்தச் சந்திப்பு நடந்ததாகத் தெரியவருகிறது.

## நெல்லியடிச்சந்தியில்

# நேற்றுக் காலை நடந்த 6-வது 'மரணதண்டனை'!

(கரவெட்டி)

நேற்று காலை ஏழரை மணியளவில் கோப்பிநிற 'டெலிகா' வானில் நெல்லியடிச்சந்தியில் திடீரென வந்த இளைஞர்கள் அதில் கொண்டுவந்த ஒருவரை பட பட வென இறக்கி இங்குள்ள மின்கம்பமொன்றில் கட்டினர். அதைத் தொடர்ந்து சுமார் ஐந்து வெடிச்சத்தங்கள் கேட்டன

(5ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கொழும்புத்துறை ரோட்டிற்கு 100 யார் உள்ளே 5½ பரப்புக்காணி (நன்னீர்க் கிணற்றுடனும் சகல வசதிகளுடனும்) உடன் விற்பனைக்குண்டு. முழுமையாகவோ, பகுதியாகவோ கொடுக்கப்படும். தொடர்பு; திருமதி சத்திவேல், 83, ரெம்பிள் ரோட், யாழ்ப்பாணம். 185

மின்சாரத்தில் இயங்கும் மணித்தியாலத்திற்கு 3300 கற்பூர வில்லைகள் அடிக்கும் இயந்திரம் விற்பனைக்கு உண்டு. ரூபா 17500/- சொனிக்ஸ் வீடியோ சென்ரர், சந்தைக்கு அருகாமை, மானிப்பாய். 209

கிளிநொச்சி நகரசபை எல்லைக்குள் (ஒரு மைலிற்குள்) ஒரு ஏக்கர் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: A. E. சமாதானம், 30/1, மருதடி ரோட், யாழ்ப்பாணம். 221

QL17ஜேர்மன் Cannonகமரா, 6 × 4 போமிக்கா பதிக்கப்பட்ட சப்பாட்டு மேசையும், ஆறு கதிரைகளும் (Highest offer) புதிய கென்வூட் Chef (தீர்வையில்லாக் கடை விலை) ஒட்டு வீட்டுக்குரிய பனை மரங்கள், சிலாகைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: த. தம்பித்துரை, 'தவவாசம்', வறுத்தலைவிளான் தெல்லிப்பழை. 227

ஆனந்த விகடன், ஜூனியர் விகடன், குமுதம், கல்கி, இதயம் பேசுகிறது, ரஜனி, ராணிமுத்து, சிரித்திரன், துக்ளக், பொம்மை, ஜெமினி சினிமா, பேசும்படம், சினிமா எக்ஸ்பிரஸ், தாய், சொடுத்தல், வேள்வி முதலிய புத்தகங்களை மிகக்குறைந்தவிலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள். அன்புஜீபுத்தக நிலையம், (அன்பு பிறின்ரேஸிற்கு அருகில்) 248/9 கே. கே. எஸ் வீதி, யாழ். நகர். 230

## கல்வி

யாழ். மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் 6-ம் தரப் பிரவேசப்பரீட்சை 24-11-84. விண்ணப்ப முடிவு திகதி 19-10-84. கடந்தகாலப் பரீட்சைகளின் 10 வினுத்தாள்களும் 30 தமிழ்க்கட்டுரைகளும் கொண்ட பரீட்சைத் துணைநூல் ரூபா 12/50. கிடைக்குமிடங்கள்:-ஸ்ரீலங்கா புத்தகசாலை, பூபாலசிங்கம் புத்தகசாலை, ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். 213

வயறிங், மோட்டார் மெக்கானிசம் காலை வகுப்புகள் கிழமை நாட்களில் நடைபெறுகிறது. புதிய மாணவர்கள் 18-10-84ல் சேர்க்கப்படுவார்கள். தொடர்பு கொள்க; பொறியியல் கல்வி நிலையம், Engineering Education Centre, புதிய மேல்மாடிக் கட்டிடம், சம்பந்தன் வைத்தியசாலை பக்கம், சாந்திசினிமா அருகாமை, 22, ராமையா செட்டியார் லேன், யாழ்ப்பாணம். விரிவுரையாளர்: S C. இம்மானுவேல், B.Sc. (Cey), Electrical and Automobile Engineer. 226

## விற்பனைக்கு

பளையில் 15 ஏக்கர் காணி (9 ஏக்கரில் இளம் தென்னை மரங்களும், கிணறும் உண்டு) விற்பனைக்குண்டு. தொடர்பு: விளம்பர இல: 225, C/o, ஈழநாடு. 225

## வெற்று பரல், வெற்றுச் சாக்குகளுக்கான கேள்விப் பத்திரம்

தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத்தில் 10,000 வெற்றுச் சாக்குகளும், 70 பழுதான வெற்று பரல்களும் (210லீற்றர் கொள்ளக் கூடியது) கேள்விப் பத்திரமூலம் விற்பனைக்குண்டு. ரூ 500 வைப்புப் பணமாக தலைமைக் காரியாலயத்தில் செலுத்திக் கேள்விப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரம் 22-10-84-ம் திகதி திங்கட்கிழமை பி. ப. 4-00 மணிக்கு முன்னர்கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் பொதுமுகாமையாளர், தெல்லிப்பழை ப நோ கூ. சங்கம், தெல்லிப்பழை என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும். தபால் உறையின் இடது பக்க மூலையில் ''வெற்றுபரல், வெற்றுச் சாக்குகளுக்கான கேள்விப் பத்திரம்'' எனக்குறிப்பிடல் வேண்டும். கேள்விப் பத்திரம் 22-10-84 திங்கட்கிழமை பி. ப. 4-00 மணிக்கு சங்க உப சபையினர் முன்னிலையில் திறக்கப்படும்.

**பொதுமுகாமையாளர்**
தெல்லிப்பழை
ப நோ. கூ. சங்கம்,
தெல்லிப்பளை.
84-10-12. 176

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மாவட்டநீதிமன்றம்
யாழ்ப்பாணம்
வழக்கு இல:
தத்துவம்/3823

காங்கேசன்துறை வீதி, தாவடி கோண்டாவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை பொன்னுத்துரை என்பவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்து விடயத்தில்

மரணமடைந்தவர்

பொன்னுத்துரை கைம்பெண் தங்கம்மா காங்கேசன் துறை வீதி, தாவடி, கோண்டாவில்.

மனுதார்.

மேல் இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறித்த காலஞ்சென்றவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்கு மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்படடுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவதேனும் 1984-ம் ஆண்டு கார்த்திகைமாதம் 2-ம் திகதி முரபகல் 9-00மணியளவில் இந்நீதிமன்றத்தின் முன்னர்தோன்றி, அவ்வாறு பதியப்பட்டுள்ளபின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனகட்டளை ஆக்கப்படலாகாதென்பதற்கு காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றுர்.

1984ம் ஆண்டு புரட்டாதி மாதம் 11ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி
**கு. குலசிங்கம்**
பதிவாளர்
207

---

**மின்சார பிரச்னையா?**
வீட்டு வயரிங் செய்ய (பொயின்ருக்கு ரூபா 35/-)
★ மோட்டர் ★ ரான்ஸ்போமர் ★ ஸ்பீக்கர்
★ வாஷிங் மெஷின் ★ மிக்சர்ஸ்
★ லிக்குடைசேர்ஸ் ★ எலெக்றிக் குக்கர்
★ மின்விசிறிகள் ஆகியன
திருத்த / ரீவைன்டிங் செய்ய
**ஒமேகா** கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். இந்துக்கல்லூரிஅருகில்)

---

**தொழிற் பயிற்சிகள்**
THEORY AND PRACTICALS
ஆரம்பம்: 1-11-84
[1] Industrial and House Wiring - 2மாதம்-Rs. 500/-
[2] Motor Re-winding - 4 மாதம் - Rs. 800/-
[3] Electrical Engineering Practice - 6மாதம்-Rs. 850/-
கல்வித்தகைமை:
G. C. E. ORD. LEVEL விஞ்ஞானப் பாடங்கள்.
செய்முறைப் பயிற்சி — ஒமேகாவில்
**OMEGA TECHNICAL INSTITUTE,**
448, K. K. S. ROAD, JAFFNA.
(Near - Jaffna Hindu College)

---

**முறிகண்டி**
**விசேட அறிவித்தல்**
முறிகண்டிப் பிள்ளையார் கோவில்
திருப்பணி நிதிக்கென்று நிதி திரட்டும்
போலி வேடதாரிகளிடம் பொதுமக்கள்
ஏமாறவேண்டாம்.
கோவில் நிர்வாகம் யாரையும்
காசு சேர்க்கவோ, ரிக்கட் விற்கவோ
அனுமதிக்கவில்லை.
திருப்பணித்தொண்டில்பங்குகொள்ளவிரும்புபவர்கள்
நேரடியாக கீழ்க்கண்ட விலாசத்துடன்
தொடர்பு கொள்ளவும்.

செ. குணரத்தினம்,
கோவில் முறிகண்டி,
முறிகண்டி.
(228)

---

**'ERNEST TRAVELS'**
உலகின் எந்தப் பாகத்திற்கும்
பிரயாணம் செய்ய வேண்டுமா?
விமான ரிக்கற்றுகளை பெற்றுக்கொள்ள
உடன் தொடர்பு கொள்ளுங்கள்.
MR. S. E. SRITHARAN,
'ERNEST TRAVELS'
162 3/7, KEYZER STREET, COLOMBO-11
Telephone: 549056

கிளை அலுவலகம்:
MR. S. NARENDRAN,
'ARENA AGENCE'
82, KANNATHIDDY JUNCTION, JAFFNA.
Telephone: 24310, 22436

(a) காசோலைகளும் (Travelers Cheque) பெற்றுக்கொடுக்கப்படும்.
(b) பணம் எடுத்துச் செல்ல வசதி உண்டு.

(யாழ்ப்பாணம் – கொழும்பு)
(229)

---

## மரம்நாட்டு விழா

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில்மரம் நாட்டுவிழாவும் உலக போஷாக்கு உணவுதின விழாவும் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

## முதலிடம் பெற்றுர்

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் தமிழ்த்தின விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட 9-ம், 10-ம் வகுப்பு மாணவர்களுக்கிடையிலான ஆக்கத்திற்கான போட்டியில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியைச் சேர்ந்த மாணவி செல்வி சுசீலா நல்லையா முதலாமிடத்தைப் பெற்றுள்ளார். இப்போட்டி யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

## கடன் பணம் வழுங்கப்பட்டது

(அச்சுவேலி)

பத்து லட்சம் வீட்டுத்திட்டத்தில் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கடன் பெற்ற அறுபது பேருக்கு 2-ம் பகுதிக் கொடுப்பனவும், இறுதிக் கொடுப்பனவும், வீடமைப்பு அதிகாரசபையின் யாழ். மாவட்ட முகாமையாளர் திரு. பொ. இராமநாதன் தலைமையிலான அதிகாரிகள் குழுவினுல் அண்மையில் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வைத்து வழங்கப்பட்டது.

## கயரோக கொடி தினம்

[கல்வியங்காடு]

இலங்கைத் தேசிய கயரோகத் தடுப்புச் சபையின் கொடி தினம்நாடுபூராவும் இம்மாதம் 19ம் திகதி இடம்பெறவுள்ளது.

இ. தே. க. தடுப்புச் சபையின் யாழ்ப்பாணக் கிளையும் இப்பகுதிகளில் 19ம் திகதி கொடி தினம் அனுஷ்டிப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

நாட்டு நிலைமை காரணமாக மேற்படி சபையின் கொடி தினம் கடந்த வருடம் பாடசாலைகள் மட்டத்திலேயே நடைபெற்றது என்றும் இம்முறை பரவலாக நடாத்த முயன்றுள்ளதாகவும் யாழ் கிளை சபையின் செயலாளர் டாக்டர் எம். ஜி. தில்லைநாயகம் தெரிவித்தார்.

## அரச அதிபர் பதில் ஆணையாளர்

(கொழும்புத்துறை)

ஆயுர்வேத வைத்தியத் துறையை ஊக்குவிக்கும் முகமாக மாவட்ட ரீதியிலான விரிவாக்கல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் பதில் ஆயுர்வேத ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபர்களே தத்தமது மாவட்டப் பதில் ஆயுர்வேத ஆணையாளர்களாகவும் கடமையாற்றுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சுச் செயலாளர் திரு. லெனட் பனம்பலன சகல அரசாங்க அதிபர்களுக்கும் இது சம்மந்தமான பணிப்புரையை விடுத்துள்ளார். இதன்மூலம் அரசாங்க அதிபர்கள் தமது கடமைகளுடன் பதில்ஆயுர்வேத ஆணையாளர்கட்கான கடமைகளையும் செய்யுமாறு பணிக்கப்பட்டுள்ளனர்.

# பங்களாதேஷில் இராணுவச் சட்டத்தை நீக்குமாறு கோரி பொது வேலைநிறுத்தம்!

## ஆர்ப்பாட்டத்தில் 60,000 மக்கள் கலந்துகொண்டனர்

டாக்கா, அக். 15

**பங்களாதேஷில் இராணுவச் சட்டத்துக்கு அமைய டிசம்பர் மாதம் நடைபெறவிருக்கும் பாராளுமன்றத் தேர்தல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், இராணுவச் சட்டத்தை நீக்குமாறும் கோரி டாக்கா நகரில் நேற்று மாபெரும் பொது வேலைநிறுத்தம் ஒன்று நடைபெற்றது.**

பங்களாதேஷின் இரண்டு முக்கிய எதிர்க்கட்சிக் கூட்டணிகள் ஒழுங்குசெய்த இந்தப் பொதுவேலைநிறுத்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் 60,000 மக்கள் கலந்துகொண்டனர். இதனையொட்டி டாக்கா நகரில் முன்கூட்டியே பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் நகரம் ஆர்ப்பாட்டத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது.

பங்களாதேஷில் இராணுவச்சட்டத்துக்கமைய டிசம்பர் மாதம் 8-ம் திகதி பாராளுமன்றத் தேர்தல்கள் நடைபெறும் என ஜனாதிபதி ஹுசெயின் முகமட் எர்ஷாட் மீண்டும் உறுதிபடக் கூறியுள்ளார். தேர்தல்கள் நடைபெற்று முதலாவது பாராளுமன்றக் கூட்டத்தொடரின் போது இராணுவச்சட்டத்தை நீக்குவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இராணுவச்சட்டத்தை நீக்கிய பின்னரே பாராளுமன்றத் தேர்தல்கள் நடைபெறவேண்டுமென்றும், இராணுவச்சட்டம் நீக்குவதற்கு முன்னர் நடைபெறும் எந்தத் தேர்தலிலும் தாம் பங்குபற்றப்போவதில்லை என்றும் அந்த நாட்டின் 15 எதிர்க்கட்சிக் கூட்டணிகள் அறிவித்துள்ளன. எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகவே இந்தப் பொதுவேலைநிறுத்தம் நேற்று இடம்பெற்றது.

மேற்படி பொதுவேலைநிறுத்தத்துக்கு ஏற்பாடுசெய்த இரண்டு எதிர்க்கட்சிக் கூட்டணிகளும் நடைபெறவிருக்கும் பாராளுமன்றத் தேர்தல்களைப் பகிஷ்கரிக்கும்முகமாக 'ஒத்துழையாமை இயக்கம்' ஒன்றை விரைவில் ஆரம்பிக்கப்போவதாகவும் தெரிவித்துள்ளன.

அதேவேளை நாட்டில் ஜனநாயகத்தை படிப்படியாக ஏற்படுத்தும் நோக்கமாக நடைபெறவிருக்கும் பாராளுமன்றத் தேர்தல்களில் எதிர்க்கட்சிகள் கலந்துகொண்டால், இராணுவச்சட்ட நிர்வாகியையும், இராணுவ நீதிமன்றங்களையும் நீக்குவதாக ஜனாதிபதி எர்ஷாட் கூறியுள்ளார். (சூ)

## விண்ணில் பறந்த 2வது பெண்மணி

வாஷிங்டன், அக். 15

அமெரிக்க பெண்மணியான 'கபீரியல் சரிவான்' 'சலஞ்சர்' விண்கலத்திலிருந்து வெளியேறி விண்வெளியில் பறந்தார். இவர் விண்வெளியில் பறந்த இரண்டாவது பெண்மணியும், விண்வெளியில் பறந்த முதலாவது அமெரிக்க பெண்மணியுமாவார்.

விண்வெளியில் ஏற்படக்கூடிய கதிர்வீச்சு, சிறிய நட்சத்திரங்களின் தாக்கம் என்பவற்றினால் இவர் விண்வெளி பாதுகாப்பு உடையொன்றை அணிந்து கொண்டே விண்வெளியில் பறந்தார்.

சோவியத் பெண் ஒருவர் கடந்த ஜூலை மாதம் விண்வெளியில் பறந்து உலக சாதனை நிலைநாட்டியது குறிப்பிடத்தக்கது. (சூ)

# "இந்தியாவின் பாதுகாப்பில் எதிர்க்கட்சிகள் அசட்டை"

## இந்திரா குற்றச்சாட்டு

ஹைதராபாத், அக். 15

''இந்தியாவுக்கு அயல்நாடுகளினால் ஏற்பட்டுவரும் பெரும் ஆபத்துக்களை உணராது எதிர்க்கட்சிகள் அசட்டைசெய்துவருகின்றன'' என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி குறிப்பிட்டுள்ளார்.

ஹைதராபாத்தில் வெள்ளத்தினாலும், வன்செயல்களினாலும் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்த பின்னர் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்து பேசுகையில் தெரிவித்துள்ளதாவது:-

''தற்போது இந்தியாவின் தேசிய ஐக்கியம், ஒற்றுமை என்பனவற்றுக்குப் பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. இதனைப்பற்றி நான் ஏதும் பேசினால் உள்நாட்டுப் பிரச்னைகளை திசைதிருப்புவதற்காகப் பேசுகின்றேன் என்று குற்றம் சாட்டுகின்றார்கள்.

''நாட்டின் பாதுகாப்புக்கு ஏற்பட்டுள்ள பிரச்னைகள் பற்றி அவர்கள் என்னுடன் விவாதிக்கலாம். அவர்கள் அவ்வாறு செய்வதில்லை.

''பாகிஸ்தானுக்கு அமெரிக்கா அணு ஆயுதப்பாதுகாப்பு அளிக்கமுன்வந்திருப்பதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. இது உண்மையாயின் மிகவும் துரதிஷ்டமான ஒரு நிலையாகவே இருக்கும்.''

''ஹைதராபாத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விசேட நிதி உதவியாக 20 கோடி ரூபா தற்போது வழங்கப்பட்டுள்ளது. மத்திய அரசு அதிகாரிகளின் அறிக்கை கிடைத்ததும் மேலதிக நிதியும் வழங்கப்படும்'' என்றார். (சூ)

## வாய்க்கால் துப்புரவு

[கோண்டாவில்]

பல வருடம் துப்புரவு செய்யப்படாதிருந்த தலையாளிக்குள வாய்க்கால் கொக்குவில் தேசிய இளைஞர் சேவை மன்ற உறுப்பினர்களால் ஆழத்திற்கு வெட்டி துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

இச் சிரமதானப் பணியை சமூகசேவை அலுவலர் திரு க. பாலதேவன் ஆரம்பித்துவைத்தார்.


உங்கள் திருப்தி எங்கள் மகிழ்ச்சி

லங்கா சீமெந்து

LANKA CEMENT

1978-ம் ஆண்டு B. S. S. 12 தரத்திற்கு உற்பத்தியாக்கப்பட்டு C. I. S. I. R. ஆல் உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

'லங்கா சீமெந்து' 'LANKA CEMENT'

முதற்தரமான போட்லண்ட் (PORTLAND) சீமெந்து உற்பத்தியாளர்கள்.

'லங்கா சீமெந்து லிமிட்டட்'

LANKA CEMENT LIMITED

சகல கட்டிட நிர்மாண வேலைகட்கும் பாவிக்க உகந்தது 'லங்கா சீமெந்து'

தேவையான சீமெந்தை உடனடியாக பெற்றுக்கொள்ள காசுக்கட்டளையுடன் இன்றே நாடுங்கள்

விநியோகப்பகுதி,

லங்கா சீமெந்து லிமிட்டட்

கீரிமலை ரோட்,

காங்கேசன்துறை.

போன் :- 22605





## தலைமன்னார் ராமேஸ்வரம் கப்பல் சேவை 3 தினங்கள் நீடிக்கப்படலாம்!

(மன்னார்)

தலைமன்னார் - ராமேஸ்வரம் கப்பல் சேவையை மேலும் மூன்று தினங்களுக்கு நீடிப்பதற்கான நடவடிகைகைகள் எடுக்கப்படுகின்றன

இம்மாதம் 20ஆம் திகதி இச்சேவை நிறுத்தப்படவுள்ளதாக அறிவிக்ப்பட்டிருந்தது. ஆயினும், இப்போது இச்சேவையை 23ஆம் திகதிவரை நடாத்துவது குறித்து வரும் திங்கட்கிழமை ரயில்வே உயர் அதிகாரிகள் மன்னாரில் மாநாடு ஒன்றை நடாத்தி இதுகுறித்த முடிவை எடுப்பர்.

## ஆஸ்பத்திரிக்கு மின் விநியோகம்

(மன்னார்)

சிலாவத்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பொது நல ஸ்தாபனங்கள், கிராமோதய சபைகள் என்பன வழங்கும் நிதிமூலம் சிலாவத்துறை அரசினர் வைத்தியசாலைக்கு மின்சாரம் விநியோகிக்கப்படவுள்ளது.

இம் மின்சார விநியோகத்திற்கென சுமார் 20 ஆயிரம் ரூபா செலவிடப்படும்.

## இவர்களின் உதவி!

[கிளிநொச்சி]

கிளிநொச்சிப் பத்திரிகையாளர், வாசகர் நலன்புரிச் சங்கம் யாழ் விழிப்புலனற்றோர் சங்கத்திற்கு 2050 ரூபா அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

கிளிநொச்சியில் நடைபெற்ற வெள்ளைப் பிரம்பு தின வைபவத்தில் வைத்து சங்கப் பொருளாளர் திரு. நாயகம் சிற்றம்பலம் இந்த பணத்தை வழங்கினார்.

### மணிவாக்கு

சொற்கள் மறைந்துள்ள பிரார்த்தனை மேலானது.

—லூதர்

# புகார்களைப் பதிய மறுப்பு மீனவர்கள் அதிருப்தி

[மாவிட்டபுரம்]

கடலில் மீன்பிடிக்கும் தொழிலாளர்களின் புகார்களை பதிவு செய்ய கடற்றொழில் பகுதிஅதிகாரிகள் மறுப்பதால் மீனவர் அதிருப்தி அடைந்துள்ளனர்.

கடலில் மீன்பிடிப்பதற்கு மாலை 6 மணியில் இருந்து அதிகாலை 6 மணி வரையும் தடைவிதிக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

இந் நிலையில் சில மீனவர்கள் இரவு நேரத்தில் கடற் கரைப் பகுதிகளில் மீன் பிடிப்பதாகவும், அந் நேரத்தில் அவர்கள் தாக்கப்படுவதுடன் மீன் வலைகள் கொள்ளையிடப்படுவதாகவும் புகார் தெரிவிக்கின்றனர்.

இரவு நேரத்தில் மீன்பிடிக்கும்போது ஏற்படுகின்ற சேதங்களுக்கு நஷ்டஈடு வழங்கப்பட மாட்டாது என்று கடற்றொழில் அதிகாரிகள் மீனவருக்கு நேரடியாக அறிவுரை வழங்கியதால பெரும்பான்மையான மீனவர்கள் இரவு நேரத்தில் மீன்பிடிப்பதை தவிர்த்துள்ளனர்.

பகல் நேரத்தில் கடலில் ஏதாவது சேதம் விளைவிக்கும் செயல் நடந்தால் அதிகாரிகள் புகார்களைப் பதிவு செய்கிறார்கள். ஆனால் இரவு நடக்கும் செயல்களுக்குப் புகார் பதிய மறுப்பதனால் மீனவர் அதிருப்தி அடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

## நமது நோக்கு

### வீதியின் தலைவிதி

இலங்கையில் ஒவ்வொரு வருடமும் வீதியில் விண்ணுலகெய்துபவர் தொகை இரண்டாயிரம். அமெரிக்காவின் ரெக்ஸாஸ் மாநில பிரதம வைத்திய அதிகாரி இதனைக் கேட்டதும் அதிர்ச்சியடைந்தாராம்.

இலங்கை சட்டத்துறை வைத்தியர் டாக்டர் சல்கேடோ அம்மாநிலத்தின் நவீன பிரேத பாதுகாப்புச் சாலையைப் பார்த்து பரவசப்பட்ட நிலையில் இச்செய்தியை வெளியிட்டதும் 'ஆண்டவனே! ஜனப்பெருக்கம் குறைவதுடன் ஜனப்புழக்கமும் வீதிகளில் குறைந்துவிடும்' என்று கிண்டல் செய்திருக்கிறார். ரெக்ஸாஸ் ம நிலத்தில் வருடாவருடம் மூன்று அல்லது நான்குபேரே கொல்லப்படுகின்றனர்.

அமெரிக்க நாட்டின் வீதிகளையோ அல்லது மலேஷியா, சிங்கப்பூர் வீதிகளையோ நாம் எட்டிப்பார்க்க முயலவில்லை. 'பில்லியட்' மேசை போல மிக அழுத்தமும் அழகுமுள்ள வீதிகள் இங்குஅமைக்கப்படும்காலத்தில் எவ்வித மக்கள், நகர பிரஜைகள் வாழ்ந்துகொண்டிருப்பாரென்பது கற்பனைக்கப்பாற்பட்ட காரியம்.

நகர ரோட்டுக்களைப்பற்றி குறிப்பாகப் பேசும்போது கொழும்பு மாநகர ஆணையாளர் திரு. கே. ரீ. டீ. ரீசேரா வெட்டொன்று துண்டு இரண்டென இரகசியத்தை வெளியிட்டிருக்கிறார்.

1978ம் ஆண்டு தொடக்கம் வாகனப் பெருக்கத்தால் கொழும்பு மாநகர வீதிகளுக்கு பலத்தசேதம் ஏற்பட்டிருந்தபோதும், ஒரு சில தற்காலிக திருத்தங்களை விடஅக்காலம்தொட்டு வீதி புனரமைப்போ திருத்தமோ இன்று வரைக்கும் நடைபெறவில்லை. இந்த கசப்பான உண்மையை ஒழிப்பு மறைப்பின்றி எடுத்துச் சொல்லும் நிர்வாக அதிகாரிகள் இந்த நாட்டில் மிக அருமை.

மழை வரமுன்னர் அங்கு ஒரு ஓட்டை, இங்கு ஒரு உடைசல் அடைக்கப்பட்டு வரிஇறுப்போர் கண்ணில்மண் போடுவது வீதிபுனரமைப்பு ஆகாதென்பதை பிரதமர் பிரேமதாசா நன்கு உணர்ந்திருக்கிறார்.

பிரதமரின் நேரடி நடவடிக்கை காரணமாக கொழும்பு மாநகருக்கு பன்னிரண்டு பெரு நெடுஞ்சாலைகள் அமைக்கப்படவிருக்கின்றன.

நகரிலோ, நாட்டிலோ செப்பமான வீதிகளின்றி பொருளாதார வளர்ச்சி முயற்கொம்பு என்பது எல்லோருக்கும் தெரியும்.

மனித முன்னேற்றத்துக்கு வீடு எவ்வளவு இன்றியமையாததோ வியாபாரம், வர்த்தகம், போக்குவரத்து, பிரயாணம், உல்லாசப்பயணம் போன்ற துறைகளுக்கு சீரான வீதிகள் இன்றியமையாதவை.

இதனை ஒரு புதுக் கருத்தென நாம் வழங்கவில்லை; இதனை அரசு அறிந்திருக்கவில்லையென்றும் குற்றம் சுமத்தவில்லை.

இதன் அவசியத்தையும் இத்துறையில் இதுகாறும் நடந்தேறிய ஒழுங்கீனங்களையும் மிக நுணுக்கமாக உணர்ந்து தீவிர நடவடிக்கையில் இறங்கியவர் பிரதமர் பிரேமதாசா என்பதை நினைவுபடுத்துவதே எமது நோக்கம்.

தலைநகரிலென்றுலென்ன மற்றைய நகரங்கள் நாட்டுப்புறங்களிலென்றுலென்ன, திருத்த வேலையில் ஈடுபடும் பட்டாளம் போலிவேலையில் ஈடுபடுவதால் நாட்டுக்கு ஏற்படும் நட்டம் அளவற்றது.

ஒருபக்கத்தில் சொற்பத்தார், இன்னொரு புறத்தில் கல்லும் மண்ணும். எல்லாப் பொறிகளையும் பூசி மெழுகி ஒரு மாபெரும் வேலை முடிகிறது. அதில் வசூலாகும் பணம் வேலைக்காரர்களின் வயிற்றில் செறிவதுமில்லை.

நாளுக்குநாள் பெருகிவரும் போக்குவரத்து வாகனங்கள் யமனின் வாரிசுகளான திமிங்கிலம் போன்ற லொறிகள், பயங்கர டிராக்டர்கள் எந்தத் தரமான வீதியையும் பாழாக்கிவிடுகின்றன.

இந்த நிலையில் இதற்கொரு தீவிர வைத்தியம் போல் இன்று அமுலுக்கு வரவிருக்கும் திட்டம் பிரிட்டிஷ் நிபுணர்கள் தீட்டிய திட்டமெனச் சொல்லப்படுகிறது. வடிகால், வெளிச்சம், சுத்தம் போன்ற முக்கிய அம்சங்கள் இத்திட்டத்தில் தக்க இடம்பெறும்.

சீரற்ற வீதிகளில் நேரும் அபாயங்கள் யாழ்ப்பாணத்தில் குறைந்தபாடில்லை. இலங்கையின் இரண்டாவது பெருநகரம் தமிழர்களின் தலைநகரம் இதற்கு விதிவிலக்கல்ல.

இன்று இம்மாவட்டம் மற்றைய தமிழ் மாவட்டங்கள்போல் ராணுவ அதிகாரியின் கண்காணிப்பில் இருப்பதால் புதிய கட்டுப்பாட்டின்படி, அவருடைய உத்தரவில்லாமல் எவ்வித திருத்தங்களுக்கும் இடமில்லை.

இது எமது தலைவிதியென்று வாளாவிருப்பதா?

கொழும்பு மாநகர ஆணையாளர்போல், யாழ். மாநகர ஆணையாளர் இதற்குள் சுழியோடி, நகரவீதிகளையாவது சீர்செய்து மக்களை மரணப் பொறியிலிருந்து காப்பாற்ற முயல்வாரா?

# பாகிஸ்தானுக்கு அமெரிக்கா அணு ஆயுத பாதுகாப்பு

## இந்தியாவுக்கு தகவல் இல்லை

புதுடில்லி அக். 15

பாகிஸ்தான் அணு ஆயுதம் பெறுவதை நிறுத்திக் கொண்டால் அதற்கு அணு ஆயுத பாதுகாப்பளிக்க அமெரிக்கா விரும்புவதாக வெளிவந்த செய்தி தொடர்பாக இந்தியாவுக்கு எவ்வித தகவலும் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கபட்டுள்ளது.

பாகிஸ்தானுக்குஅணுஆயுத பாதுகாப்பளிக்க அமெரிக்க ஜனாதிபதி திரு. றொனல்றீகன் விரும்புவதாக வெள்ளை மாளிகை அதிகாரியொருவர் தெரிவித்ததாக பாகிஸ்தான் தினசரிப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டிருந்தது.

அமெரிக்க ஜனாதிபதி றீகன் தேர்தல் பிரசாரக் கூட்டத்தின் போது இத்தகையதொரு கருத்தை வெளியிட்டிருப்பாரென்பதை ஏற்றுக் கொள்ள முடியாது.

பாகிஸ்தானுக்கு எந்தவொரு நாட்டிலிருந்தும்அணு ஆயுத அச்சுறுத்தலில்லை இந்தியாவிடம் அணு ஆயுதங்கள் இல்லை, இது தொடர்பாக தற்போது எந்த உறுதியும் வழங்கப்படத் தேவையில்லை.

சீனுமுதலாவது அணுசக்தி பரிசோதனையைமேற்கொண்ட பின்னர் இந்தியாவில் அப்போது பிரதம மந்திரியாகவிருந்த லால்பகதூர் சாஸ்திரி அமெரிககாவிடமும், சோவியத் யூனியனிடமிருந்தும் இந்தியாவுக்கு அணுஆயுத பாதுகாப்புக் கோரினார். இவரின் வேண்டுகோளுக்கு இவ்விரு நாடுகளும் செவிசாய்க்கவில்லை அணு ஆயுத பாதுகாப்பு என்பது முழுமையாக இத்தகையதொருவகையில் ஏற்படுவதொன்றல்ல.

# அடையாள அட்டை

## வழங்குவதில் ஏன் இந்தத்தாமதம்?

அடையாளஅட்டைக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கு 6 மாதமாகியும் இன்னும் அடையாளஅட்டை கிடைக்கவில்லை. இந்தப்படு மேசாமானநிலையில்பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் யாழ். நகரில் 10-10-84 ம் திகதி நடாத்திய உண்ணாவிரதத்தின் பின் யாழ். அரசாங்க அதிபருக்கும் அதே மாணவர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அடையாளஅட்டை கையில் இல்லாத இளைஞர்கள் தெருவிலோ, வழியிலோ கைதுசெய்யப்படுவதும் பலர் இராணுவமுகாம்களில்அடைக்கப்பட்டுள்ளதும் நாடறிந்த உண்மை. இந்த அவலங்கள் பலரால் பலமுறை அரசுக்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளன. எனினும் தாமதம் தொடரவே செய்கின்றது!

அடையாள அட்டை இல்லாத காரணத்தால் கஷ்டப்படுவோர் தமிழ் மாணவரோ, இளைஞரோ மட்டுமல்லர். நடுத்தர வயதினர்க்கும், முதியோர்க்கும் கதி இதுவே! அத்தாட்சிப்படுத்தப்பட்ட புகைப்படத்தைக் காட்டி விளக்கிச் சலுகைபோல சிலர் விடுவிக்கப்படுகின்றனர். ஆயினும் ஏன் இந்த அவலம்? பரீட்சைக்கும் பிறநாட்டுக் கடவுச் சீட்டுக்கும் வங்கிக்கும் இன்னும் பலவுக்கும் இன்று அடையாள அட்டை அத்தியாவசியபொருளாகிவிட்டது. இருந்தும் இதற்குரிய விண்ணப்பங்கள் கொழும்பு சென்று அங்கு ஆறு மாதத்திற்கும் மேலாக உறங்கிக்கிடப்பது அவசியம்தானு?

அடையாள அட்டை அந்த அந்த அரச செயலகங்களுக்கு மேலும் பன்முகப்படுத்தப்பட்டோ வேறுவகையில் துரிதப்படுத்தப்பட்டோ இவை இரண்டு கிழமையுட் கிடைக்க இனியேனும் வழி பிறக்குமா? இன்றைய அவலம் நீங்குமா?

நாக. பத்மநாதன்,
சித்தன்கேணி

## மக்கள் கருத்து

### பால்மா பற்றிய வதந்தி

வடபகுதியில் விற்பனையாகும் குறிப்பிட்ட ஒருவகையைச் சேர்ந்த பால்மா பைக்கற்றுகளில் கருத்தடைமருந்து மாத்திரமின்றி உடலின் சக்தியை நாளுக்குநாள் இழக்கச் செய்யும் ஒருவகை மருந்தும் அதில் கலக்கப்பட்டிருப்பதாக வதந்தி பொதுமக்கள் மத்தியில் பரப்பப்பட்டுள்ளது.

இது உண்மையானதா அல்லது வெறும் வதந்திதானு என்பதைப் பொதுமக்கள் குறிப்பாக வடபகுதியில் உள்ளவர்கள் அறிந்துகொள்ளுவதற்கு விரும்புகிறார்கள்.

வடபகுதியிலுள்ள அரசாங்க அதிகாரிகள் (மக்களின்உணவு, போஷாக்கு, ஆரோக்கியம்என்பவற்றுக்குப் பொறுப்பானவர்கள்) அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு, பொது மக்களுக்குப் போதிய அளவு விளக்கம் அளிக்கவேண்டும் என்பதுடன், வடபகுதியில் உள்ள வைத்திய நிபுணர்களும், மருத்துவ ஆய்வாளர்களும் குறிப்பிட்டவகையைச் சேர்ந்த பால்மாவை நன்குபரிசீலனை செய்து உண்மைநிலையினைத் தெளிவுபடுத்தவேண்டும் எனவும் பொதுமக்கள் விரும்புகிறார்கள்.

அ. க. தமிழ்ச்செல்வன்
சுன்னுகம்

# யாழ். தபாலகத்தில் முத்திரை தட்டுப்பாடு

(கொழும்புத்துறை)

பத்துரூபாவுக்கு மேற்பட்ட முத்திரைகள் எதுவும் விற்பனைக்கு இல்லையென்று யாழ். தபால் நிலையம் அறிவித்துள்ளது. பத்துரூபாவுக்குட்பட்ட முத்திரைகளை மட்டுமே யாழ் தபாற்கந்தோரில் பெறக்கூடியதாகவுள்ளது.

யாழ். தபால் நிலையத்தில் 100 ரூபா, 200ரூபா, 500ரூபா முத்திரைகள் எதுவுமில்லையென்று உத்தியோக பூர்வமாக அறிவிக்கப் பட்டிருக்கிறது. உபதபாற் கந்தோர்களில் அறுபது சதத்திற்குமேற்பட்ட முத்திரைகளைப் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ். கச்சேரியிலும் இம் முத்திரைத் தட்டுப்பாட்டினுல் பொதுமக்கள் மிகுந்த கஷ்டங்களையும் சிரமங்களையுமடைந்து வருகின்றனர்.

### வரப்பெற்றோம்

தாயகம்: தேசிய கலை இலக்கியப் பேரவை வெளியீடு வரப்பெற்றோம். கனதியான பல விடயங்களைத் தாங்கி ஓகஸ்ட் - செப்ரெம்பர் மாத 'தாயகம்' வெளிவந்துள்ளது. ஆடம்பரமற்ற அழகுடன் அமைந்துள்ள தாயகத்தின் முன் அட்டை வரவேற்கக் கூடியதாக உள்ளது.

ஆசிரியர் தலையங்கத்தில் அரசின் பயங்கரவாத ஒழிப்பும், இனப்பிரச்னையும், மாணவர் பகிஷ்கரிப்பும் எதிர்காலமும் என சம காலப் பிரச்னைகள் அலசி ஆராயப்பட்டுள்ளன. இலகுவான மொழி நடையில் இப்பகுதி அமைந்துள்ளதால் எவரும் படித்துப் புரிந்துகொள்ளக்கூடியதாய் உள்ளது.

'நவீனத்துவமும் பாரதியும்' என்ற தலைப்பில் எம். ஏ. நுஃமான் எழுதிய கட்டுரையுடன் தொடரும் படைப்புகள் சி. சிவசேகரத்தின் 'நவீன' ஓவியம் பற்றிச் சில சொற்கள்'' என்ற தொகுப்புடன் முடிவுறுகின்றது. இந்த இரண்டு படைப்புக்களுக்கும் நடுவே அமைந்துள்ள செண்பகனின் 'பிணங்களின் மறுபெயர்' சன்மார்க்காவின் 'விழிப்பு' போன்ற கவிதைகள் நெஞ்சைத் தொடுவதாக உள்ளன. இவற்றினை விட கவிஞர் முருகையனின் 'வேறு விதங்களும்' வெகு நுணுக்கமான படைப்பு.

தாயகத்தில் வெளிவந்துள்ள சகல ஆக்கங்களும் மக்களின் வாழ்க்கையைப் பிரதிபலிப்பனவாகவும், அவர்களின் விமோசனத்துக்கு வழிவகுக்கும் வகையிலேயும் ஆக்கப்பட்டுள்ளன.

ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் தாயகத்திற்கும் பெரும் பங்குண்டு என்பதனைத் தொடர்ந்துவரும் 'தாயகம்' நிலைநிறுத்துமென்று நம்பலாம். இத்தகைய ஒரு இலக்கிய சஞ்சிகைக்கு வாசகர்களினதும், எழுத்தாளர்களினதும் ஒத்துழைப்பு அவசியம்தேவை.

—துரைசிங்கம்

## கிளிநொச்சி 'ஈழநாடு' வாசகர் வட்டம்

(கிளிநொச்சி)

''தமிழ்மக்களின் ஏகோபித்த பத்திரிகை ஈழநாடே'' என்று கிளிநொச்சியில் நடைபெற்ற ஈழநாடு வாசகர் வட்ட அங்குரார்ப்பணக்கூட்டத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான என். ஜெயநாதன் புகழாரம் சூட்டினர்.

கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலய அரங்கில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு இலங்கை தமிழராசிரியர் சங்க நிதிச் செயலாளர் திரு. என். சோதிநாதன் தலைமை வகித்தார்.

கூட்ட மண்டபம் பூராகவும் ஆண்களும், பெண்களும் எழுத்தாளர்களும், பத்திரிகையாளர்களும் பலதுறை சார்ந்த அதிகாரிகளும், ஈழநாடு வாசகர்களுமாக பெருந்தொகையானோர் கூடியிருந்தனர்.

அரசாங்க அதிபர் திரு. ஜெயநாதன் மேலும் பேசுகையில்: ''ஈழநாடு பத்திரிகை தமிழ் இனத்திற்கு பலதுறைகளிலும் பணியாற்றி வருகிறது. மூலைமுடுக்கில் முடங்கிக் கிடக்கும் கலை, இலக்கிய, விளையாட்டுத்துறை சார்ந்தோரை ஒன்றிணைத்து அவர்களது திறமைகளை வெளிக்கொணர ஈழநாடு வாசகர் வட்டம் பாடுபடவேண்டும்.

''கிளிநொச்சி மாவட்டம் ஆரம்பிக்கப்பட்டபின் கலை, இலக்கியம், பத்திரிகை சார்ந்தோரை ஒன்றிணைத்து பெரும் திரளான சனத்தொகையுடன் நடைபெறும் முதல் விழா இன்று நடைபெறும் ஈழநாடு வாசகர் வட்டக்கூட்டமே என கூறிக்கொள்வதில் மகிழ்ச்சியும் பெருமிதமும்அடைகின்றேன்'' என்ருர்.

திரு. த சோதிநாதன் தலைமையுரையில் கூறியதாவது:

''ஈழநாடு ஒரு தனித்துவமும் மகத்துவமும் கொண்ட பத்திரிகை. ஏனைய ஆங்கில சிங்கள பத்திரிகைகள் போல் தலைநகரில் இருந்து வெளிவராமல் மாவட்டத் தலைநகரில் இருந்து வெளிவந்தும்கூட தமிழ்மக்களின் தேசியப் பத்திரிகையாகத் திகழ்கிறது.

''கிளிநொச்சி மாவட்ட மக்களின் தலையாய அபிப்பிராயமான தனிமாவட்டக் கோரிக்கைக்கு ஆரம்பம் முதல் இறுதிவரை முன்னுரிமையும் முக்கியத்துவமும் கொடுத்து வந்திருக்கிறது. 1963ம் ஆண்டு அப்போது யாழ் மாவட்ட அரசாங்க அதிபராக இருந்த நெவில் ஜயவீர, கிளிநொச்சி கனிஷ்ட மகாவித்தியாலயத்தில் நடந்த இணைப்புக்குழுக் கூட்டத்தில் அப்போது பாராளுமன்ற உறுப்பினராக இருந்த தி. அ. சிவசுந்தரத்தின் கோரிக்கைகளை நிறைவேற்றவேண்டுமானுல் கிளிநொச்சி தனிமாவட்டமாக வேண்டும் என்ருர். அடுத்த நாள் ஈழநாடு முதற்பக்கச் செய்தியாக இதைவெளியிட்டது. அதன்பின்அக்கோரிக்கை மீண்டும்மீண்டும் வலுப்பெற்ற போதெல்லாம் ஆதரவு நல்கி இறுதியில் நல்லாசியும் கூறியது''

ஈழநாடு வாசகர்வட்ட அங்குரார்ப்பணக் கூட்ட அமைப்பாளர் திரு. நாயகம் சிற்றம்பலம் பேசுகையில், 'இருபத்தைந்து ஆண்டுகளுக்குமுன் மழைக்கு முளைத்த காளான் போல் தோன்றிய ஈழநாடு பத்திரிகை படிப்படியாக முன்னேறி தமிழினத்தின் விடிவுக்கான பெரும் பணியையும் ஆற்றிவருகின்றது. தமிழினத்தின் பலவித போராட்டங்களில் எத்தனையோ இன்னல்களுக்கு மத்தியில் முகம் கொடுத்து முன்னேறி வளர்ச்சி கண்டுள்ளது பெருமைக்குரிய விடயமாகும்'' என்ருர்.

சட்டத்தரணி ரி. சிறீஸ்கந்தராசா பேசுகையில்,

## "கொள்வனவு நிலையத்தை மூடவேண்டாம்"

### கிளிநொச்சி விவசாயிகள் கோரிக்கை

[கிளிநொச்சி]

''கிளிநொச்சி மாவட்டம் முழுவதற்கும் சேவை செய்கின்ற விற்பனைத் திணைக்களத்தினுடைய கொள்வனவுப் பகுதியை மூடிவிடக் கூடாது இது இங்குள்ள சிறிய விவசாயிகளின் நலன்கருதி ஸ்தாபிக்கப்பட்டது. அத்துடன் இப்பகுதியில் உள்ளசகலருக்கும் தேவையானது.'' இவ்வாறு கோரும் தந்திகளை கிளிநொச்சி விவசாயிகள் கழகம் விவசாய ஆராய்ச்சி அமைச்சருக்கும், உணவு வர்த்தக அமைச்சருக்கும் அனுப்பி வைத்துள்ளது.

இத் திணைக்கள கட்டடத்தின கொள்வனவுப் பகுதியை பாற்பண்ணைப் பால் சபை தமது விற்பனைகளை விரிவு படுத்துவதற்காக எடுப்பதற்கு முயற்சிசெய்து வந்தவேளையில் விவசாயிகள் கழகம் தந்திகளை அனுப்பியதுடன், நீண்ட மகஜர்களையும் இவ்விரு அமைச்சர்களுக்கும், ஜனதிபதிக்கும் அனுப்பி வைத்துள்ளது.

## பாடசாலையிலிருந்து விலகியமாணவருக்கு பயிற்சி நெறி

(பண்டத்தரிப்பு)

காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் பாடசாலையை விட்டு விலகிய மாணவர் நலன் கருதி தச்சுத் தொழில் பயிற்சி நெறியும் ஆடை தயாரிப்புபயிற்சி நெறியும் கடந்த விஜயதசமி தினத்தன்றுஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

தச்சுத் தொழிற் பயிற்சி நெறிக்கு 10 பேரும் ஆடை தயாரித்த பயிற்சி நெறிக்கு 25 யுவதிகளும் அனுமதி பெற்றுள்ளனர். இப் பயிற்சி நெறிகளுக்கு உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக இவ் வருட பனமுகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்ககது.

## கயரோக கொடிதின வைபவம்

(வண்ணர்பண்ணை)

இலங்கையன் தேசிய கயரோகத் தடுப்புச் சங்கத்தினுல் நடாத்தப்படும் கொடிதின வைபவம் யாழ். வண்ணை ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் ஆலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. நல்லூர் திரிசாரணர் பிரிவைச் சேர்ந்த செல்வன் ஆர் ராஜ்குமார், செல்வன் தி ஸ்ரீதரன் ஆகியோர் தலைமையில் திரிசாரணர்கள் இக்கொடி விற்பனையை நடத்தினர்.

தேசிய கயரோகத் தடுப்புச் சங்க யாழ் கிளை உத்தியோகத்தர்கள் திருஎஸ். சரவணபவன் திரு கே. நடராசா, நல்லூர் திரிசாரணர் குழுத் தலைவர் திரு எஸ். ராசு ஆகியோர் இவ் வைபவத்தைத் தொடக்கி வைத்தனர்.

''ஈழநாடு பக்கச்சார்பற்ற பத்திரிகை. இந்த நிலையில் சிலரின் தவருன கணிப்பினுல் இனத்துவேசப் பத்திரிகை எனக் குற்றஞ்சாட்டி தீயிட்டுக் கொழுத்தப் ட்டபின் இப் பத்திரிகையின் வளர்ச்சி இமாலயத்தை எட்டுவிட்டது'' என்ருர்

கொத்தணிப் பாடசாலை அதிபர் தீ. இரா. சின்னத்தம்பி தனதுரையில், ''எத்தனையோ இன்னல்களுக்கு மத்தியிலும் ஈழநாடு பத்திரிகை தலைநகருக்கு வெளியே இருபத்தைந்து ஆண்டுகளாக தொடர்ந்து வெளிவருவது ஒரு மாபெரும் சாதனையாகும் என்ருர்.

கிராமசேவையாளர் எஸ். தனபாலசிங்கம், கவிஞர் சலோசியஸ், மரணவிசாரணை அதிகாரி மு. யோகலிங்கம், காந்தி சேவா சங்கப் பிரமுகர் சே. வேலாயுதபிள்ளை, அதிபர் ஏ. கே. இராசேந்திரம், ஈழநாடு வாரமலர் ஆசிரியர் எஸ். சபாத்தினம் (சசிபாரதி) டாக்டர் கே. வி. கே. திருலோகமூர்த்தி உட்பட வேறு பலரும் உரையாற்றினர்கள்.

## 94 தமிழக மீனவர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தனது பாதுகாப்புக்கருதி பாதுகாப்பாகச்சிறையில் வைக்கும்படி நீதிபதி உத்தரவிட்டார்.

இம்மாதம் 29ம் திகதிவரை இவர்கள் றிமாண்டிலும், சிறையிலும் வைக்கப்படுவார்கள் என்று நீதிபதிஉத்தரவிட்டார்.

## கிராமிய வங்கி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் மூலம் ஒய்வூதியம் பெறுமாறு கோரும், துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டது.

வடபகுதி தபாலகங்கள் மூலம் சுமார் 8000 பேர் ஒய்வூதியம் பெற்று வந்தார்கள். இவர்களுக்கு கிராமிய வங்கி மூலம், ஒய்வூதியம் வழங்க அவர்களின் சம்மதம் கேட்கப்பட்டுள்ளது.

இவர்கள் சம்மதித்தால், ஒவ்வொருவரும், தங்கள் இடத்திலுள்ள கிராமிய வங்கி மூலம் ஒய்வூதியம்பெற ஏற்பாடு செய்யப்படும், (க)

## நெல்லியடிச் சந்தியில்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வான் உடனடியாகச் சென்று மறைந்தது தலையிலிருந்து இரத்தப் சிந்திக்கொண்டிருந்தது மக்கள்ஓடிச் சென்று பார்த்தனர்.

மரணமானவர் சுமார் 50 வயது மதிக்கலாம். அவருக்கு கீழே பிரயாணப்பை ஒன்று போடப்பட்டிருந்தது. அதற்குள்ளிருந்து வெற்று சாராயப் போத்தல் ஒன்றும் வெளியே காணப்பட்டது. அட்டை ஒன்றில் எமது புனிதமன இயக்கத்தைக் காட்டிக் கொடுத்தமைக்காக சுப்பிரமணியத்துக்கு எமது தண்டனையாகிய மரணதண்டனையை விதிக்கிறோம் புலிகளின் தாகம் தமிழீழத்தாயகம் தமிழீழவிடுதலைப் புலிகள்'' குறிப்பிடப்பட்டு அவருடன் இணைத்துக் கட்டப்பட்டிருந்தது.

இறந்தவரின் சடலத்தை பருத்தித்துறை நீதவன் கே கணபதிப்பிள்ளை பார்வையிட்டு மந்திகை ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

கவச வாகனங்களில் வந்த இராணுவத்தினர் சடலத்தை எடுத்துச் சென்று மந்திகை ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைத்தனர்.

நெல்லியடிச் சந்தியில் இது ஆருவது ''மரணதண்டனை'' யாகும்.

## இனந்தெரியாத சடலம்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஸ்ரான்லி வீதி புகையிரதக் கடவைக்கு அண்மையில் இனந்தெரியாத ஒருவரின் சடலம் அநாதரவான நிலையில் நேற்றுக்காலை கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

இச்சடலத்தை யாழ். மாநகரசபை சுகாதாரப் பகுதியினர் எடுத்துச்சென்று யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் அடையாளம் கண்பதற்காக வைத்துள்ளனர், (மா)

## எந்த நேரத்திலும்....

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மேற்கொள்ளப்பட்டதால் தற்போது நிலைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் திரு. நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

முதல்வர் சுயநினைவோடு இப்போது இருக்கிருர். கைகால் அசைவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. சிறுநீர் இயக்கத்திலும் முன்னேற்றம் கண்டிருக்கிறது. உடலில் உள்ள உப்பு 180 ஆக குறைந்துள்ளது. சர்க்கரை அளவும் குறைந்துள்ளது. இரத்த அழுத்தமும் இயல்பாக இருக்கிறது என்றும் திரு. நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

நரம்பியல், மற்றும் சிறுநீரக வைத்தியத்துறை நிபுணர்கள் நால்வர் அமெரிக்காவிலிருந்து எம். ஜி ஆருக்குச் சிகிச்சை அளிப்பதற்காக வரவுள்ளனர் புதன்கிழமை இவர்கள் சென்னைவருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது,

முதல் அமைச்சர் எப்போது அமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொள்வார் என்பது குறித்தமுடிவை சிகிச்சை அளிக்கும் மருத்துவர்கள் முடிவு செய்வார்கள். அவர் அமெரிக்கா செல்வதற்கு மத்திய அரசின் விமானம் ஒன்று எந்நேரமும் அவரைக் கொண்டுசெல்வதற்குத் தயாராகவுள்ளது.

இடைக்காலத்தில், பம்பாயிலுள்ள தலைசிறந்த நரம்பியல் நிபுணர் டாக்டர் நேர்சல் வார்டியாவை எம். ஜி ஆருக்குச் சிகிச்சை அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தகவல்கிடைத்துள்ளது.

முதலமைச்சரின் உடல் நிலையைக்கண்காணித்து வரும் டாக்டர்கள்குழு மாற்றியமைக்கப்பட்டிருப்பதாகவும் நெருஞ்செழியன் தெரிவித்தார் இந்தக்குழுவுக்கு மக்கள் நல்வாழ்வுக்குழுச் செயலாளர் ஒருவர் இணைப்பாளராக இருப்பார். மருத்துவக் கல்லூரி இயக்குனர் டாக்டர் திருமதி வலிதா ராமேஸ்வரன், டாக்டர்கள் திருவேங்கடம், திரு. பி. கே ரெட்டி, என். கே. மணி, நரேந்திரன், ஜெகநாதன் கே. எஸ். ராமலிங்கம், சுப்பிரமணியம், வி. ஷேஷையா ஆகியோர் இந்தக்குழுவில் இருப்பார்கள்.

தேவையான அவசர நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வதற்கு அமைச்சரவை உட்குழு வொன்று தமது தலைமையில் அமைக்கப்பட்டிருப்பதாகவும் திரு நெடுஞ்செழியன் நேற்றுக் கூறினுர்,

இந்த உட்குழுவில் அமைச்சர்கள் ராமச்சந்திரன், கே.ஏ கிருஷ்ணசாமி, ராமவீரப்பன், டாக்டர் ஹண்டே ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

தமிழ்நாடு தலைமைச் செயலாளர் திரு. சொக்கலிங்கம் இந்தக் குழுவில் செயலாளராக இருப்பார்

முதலமைச்சரின் மருத்துவ ரீதியான நிலைமையில் எந்த விதமாறுதலும் இல்லையென்று தமிழக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் ஹண்டே நேற்றுத்தெரிவித்தார்.

'அவர் சுய உணர்வுடன், இருக்கிருர்; சிகிச்சைக்கு ஈடு கொடுக்கிருர். பம்பாயிலிருந்து நரம்பியல் நிபுணர் வடியா இன்று பிற்பகல் சென்னை வந்தார். அவர் யோசனைக்கிணங்க மற்ருெரு ஆய்வு நடத்தப்பட்டது'' என்று டாக்டர் ஹண்டே தெரிவித்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் குணமடையத் தேவையான எத்தகைய உதவியும் செய்யப்படுமென்று பிரதமர் இந்திரா காந்தி தெரிவித்துள்ளார். அவரது சுகயீனம் குறித்துத் தாம் கவலையும் வேதனையும் அடைந்துள்ளதாக தமிழ நாடு அமைச்சர்களுக்கு அறிவித்துள்ளார்.

மாநில ஆளுனருக்கு அவர் அனுப்பிவைத்துள்ள செய்தியொன்றில், வெளிநாட்டு மருத்துவ நிபுணர்களை கலந்தாலோசிப்பதற்குத் தேவையான உதவிகளைத் தாம் ஏற்பாடு செய்து தருவதாக திருமதி இந்திரா தெரிவித்திருக்கிருர்.

டாக்டர்களின் ஆலோசனைப் படி எம், ஜி. ஆரை அமெரிக்காவுக்கோ, வேறு எந்த ஒரு நாட்டுக்கோ கொண்டு செல்வதற்கான உதவி அளிக்கப்படுமென்றும் திருமதி இந்திரா உறுயளித்துள்ளார்.

எம். ஜி. ஆர் விரைவில் குணமடைய வேண்டுமென்றும் தமது செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மூதலமைச்சரின் உடல் நிலைகுறித்து அவ்வப்போது அறிந்து வருவதாகவும் இந்திரா தமது செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் குணமடைய வேண்டுமென்று தமிழக ஆலயங்கள் முழுவதும் விசேட பூசைகள் நடைபெறுகின்றன,

முதல்வரின் உடல்நிலையைச் கருத்திற் கொண்டு மறுதிகதி குறிப்பிடாமல், சட்டப் பேரவை நேற்று ஒத்திவைக்கப்பட்டது.

தமிழ்நாடு மேல்சபையும் மறுதிகதி குறிப்பிடாமல் நேற்று ஒத்திவைக்கப்பட்டது.

## வானெலிச் செய்தி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

செய்தி சரியானதல்லவென்றும், முன்னைய ஒழுங்கின்படி காரைநகர் கடற்படைத் தளத்திலிருந்து தென்கீழ் பிரதேசத்தில் தொடர்ந்து மீனவர்கள் இரவு நேரத்தில் மீன்பிடிக்கலாமென்றும், காரைநகரின் வடக்குக் கிழக்குப் பகுதிகளான பலாலி, காங்கேசன்துறை மயிலிட்டி, பருத்தித்துறை ஆழியான், சுண்டிக்குளம், செம்பியன்பற்று ஆகிய பகுதிகளில் மீனவர்கள் மீன்பிடிக்கக் கட்டுப்பாடு தொடர்ந்து இருக்கிறதென்றும் அமைச்சர் தெரிவித்ததாக யாழ். அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

வானெலியில் ஒலிபரப்பான செய்தி தவருனதென அமைச்சர் தெரிவித்ததாகவும் யாழ். அரசாங்க அதிபர் கூறினுர்.

## பிரதமர் மீண்டும்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வித்துள்ளதுடன் தமதுகட்சி ஆட்சிக்குவந்தால் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகந்தியின் உதவியுடன் பயங்கரவாதத்தை ஒழிப்போம் என்று உறுதியளித்துள்ளார். ஆனுல், ஐ தே. கட்சிமக்களின் அபிலாசைகளுக்கே முக்கியத்துவமளிக்கிறதென்றும், மக்கள் விருப்பத்தைப்பூர்த்தி செய்வதிலேயே தமது கவனத்தைச்செலுத்துகிறது என்றும் பிரதமர் சொன்னுர்.

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டக் கல்லூரிகளுக்கிடையிலான சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டிகள் இன்றுமுதல் ஆரம்பமாகின்றன.

இன்றைய போட்டியில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியும் கொக்குவில் இந்துக் கல்லூரியும், சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் மோதுகின்றன.

ஏ, பி, ஸி ஆகிய மூன்று பிரிவுகளிடையே இன்று பிற்பகல் 2 மணிதொடக்கம் ஆட்டம் நடைபெறும்.

### சென். பற்றிக்ஸ்

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியும், யாழ். வை. எம். ஸி. ஏ. கழகமும் இன்று சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் மோதுகின்றன. (வி

# இன்றைய பலன்

மாதம்—புரட்டாதி
திகதி—30(16-10-1984)
வாரம்—செவ்வாய்
திதி—ஷஷ்டி முற்பகல் 11-23ன் மேல் ஸப்தமி
நக்ஷத்திரம்— திருவாதிரை பின் இரவு 3-26 வரை

மேடம்:- சந்தர்ப்பத்திற்கேற்ற வண்ணம் பொருள் தாரளமாகக் கிடைக்கும் சிலர் வாழ்க்கையில் அதிர்ஸ்டலாபங்களுக்கும் இடமுண்டு.

இடபம்:- சிந்தனையில் தடுமாற்றம் ஏற்படும் நண்பர் ஒருவரைப்பகைத்துக் கொள்ள நேரிடலாம் தொழில் துறையில் மறைமுகஎதிர்ப்புக்குமிடமுண்டு.

மிதுனம்:- வெளியிடத் தொடர்புகளில் மந்த நிலை தென்படும் வருவாய் சம்பந்தமான கவலை அதிகரிக்கும் உடல் நலம் பாதிக்கப்படக் கூடும்.

கடகம்:-இலட்சியவாதிகளுக்கு இன்று சிறப்பான தினம் உரிமைகளைப் பெறுவதில் புதிய பாதை தென்படும் முதியவரின் உபதேசம் முன்னேற்ற மளிக்கும்

சிங்கம்:- எதிர்பார்த்த வேதனம் இடையில் தடைப்படலாம் சிலர் வாழ்க்கையில் கடன் தொல்லையதிகரிக்கும் சகோதரவழி சஞ்சலத்திற்கும் இடமுண்டு.

கன்னி:- அன்னைவழிஆதரவு தாரளமாகக் கிடைக்கும் அறிஞர்களின் தொடர்புகளும் கிடைக்கலாம் பொருள் வரவிற்கும் இடடுண்டு.

துலாம்:- அறவழியில் மனநாட்டம் செல்லும் தாராள மனப்பான்மைமூலமும் பணம் செலவாகும்இளையபிள்ளையால் மகிழ்ச்சிக்கும் இடமுண்டு.

விருச்சிகம்:- அவசரக் கோலம் சிக்கலைத் தோற்றுவிக்கும் மனதில் விரக்தி தோன்றும் வீணசிந்தனை யால் சோர்வு நிலை தென்படும்.

தனுசு:- தாம்பத்திய வாழ்வில் மகிழ்ச்சி கரமான சம்பவங்கள் இடம்பெறும். களஸ்திரவழியில் பொருள் வரவுக்கு இடமுண்டு கண்ணியமான நடவடிக்கைகளில் ஈடுபடுவீர்கள்.

மகரம்:- போட்டி விவகாரங்களில் பணம் விரயமாகும் ஆணவப் போக்கில் சந்தர்பம் நழுவவிடப்படலாம் எதிரிகள் மறைமுகத் தாக்குதல் நடத்தலாம்.

கும்பம்:- அன்புக்கரங்கள் அணைக்கும் அதிர்ஷ்டதேவதையின் பார்வையும் பதியலாம் தக்கசமயத்தில் தந்தையின் ஆதரவு கிடைக்கும்.

மீனம்:-தொழில் மாற்றம் அல்லது இருப்பிட மாற்றத்திற்கு வழி கோலப்படலாம் இதன் மூலம் பதவியிலும்உயர்வுகிடைக்கலாம்.

திருமலை
வே. ரவீந்திரன்

# பாவிக்க முடியாத நிலையில் கிணறு

(கல்வியங்காடு)

அரியாலை கண்டிவீதியின் ஓரமாக அமைந்துள்ள சின்னக்கிணற்றடி என அழைக்கப்படும் நன்னீர்கிணறு மக்கள் உபயோகிக்க முடியாதவாறு குப்பைகள் போடப்பட்ட நிலையில் இருக்கிறது.

இச்சுற்றுடலில் உள்ள மக்கள் நல்லதண்ணீர் பெறுவதற்காக தூர இடங்களுக்குச் செல்கிறார்கள். இக்கிணற்றுக்குப் பொறுப்பாகவுள்ள யாழ் மாநகரசபையினர் தகுந்த நடவடிக்கை எடுத்து தண்ணீர் பெற உதவும்படி இப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# ரூபவாஹினி

மாலை

5-30 சிறுவர் நிகழ்ச்சி
6-00 சிங்கள நிகழ்ச்சி
6-30 'நான் உங்கள் தோழன்' உள்ளூர் தமிழ் திரைப்படத் தொடர்ச்சி
6-55 செய்தி ள் [தமிழ்]
7-15 உள்ளூர் கலைஞர்களின் நிகழ்ச்சி
7-45 ஆங்கில நிகழ்ச்சி
8-15 செய்திகள் [சிங்களம்]
8-30 ஆங்கில நிகழ்ச்சி தொடர்ச்சி
9-00 பல்வேறு நகைச்சுவை நிகழ்ச்சிகள்
9-30 செய்திகள் [ஆங்கிலம்]
10-00 ஆங்கில நிகழ்ச்சி
10-30 உலகச் செய்திகள்
10-35 ஆங்கில நிகழ்ச்சி தொடர்ச்சி
10-55 ஒளிபரப்பு முடிவு

# உடு புடவைகள் அன்பளிப்பு

(புலோலி)

உலகச்சிறுவர்கள் தினத்தையொட்டி பருத்தித்துறை லயன்ஸ் கழகம் வதிரி ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரம அனுதைச் சிறுவர் சிறுமியர்களுக்கு உடு புடவைகளை அன்பளிப்புச் செய்தது.

பருத்தித்துறை லயன்ஸ்கழகத் தலைவர் டாக்டர்எம் கே முருகானந்தன் தலைமையில் இவ் அனுதைச்சிறுவர் சிறுமியர்களுக்கான உடு புடவைகள் அன்பளிப்பு வைபவம் நடைபெற்றது.

# மனமுடைந்த வேலைக்கார சிறுமி தற்கொலை

[மாவிட்டபுரம்]

தீபாவளிக் கொண்டாட்டத்திற்காக ஊருக்குப் போக விரும்பிய வேலைக்காரச் சிறுமியை வீட்டுக்காரர் தடுத்ததால் மனமுடைந்த அச்சிறுமி நஞ்சருந்தி உயிரைப் போக்கிக் கொண்டார்.

மயிலிட்டி தெற்கைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை செல்வரத்தினம் வீட்டில் வேலைக்காரச் சிறுமியாக இருந்த சண்முகம் மேரி (12 வயது) என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவார்.

இவரது மரணம் குறித்து திடீர் மரண விசாரணை அதிகாரி திரு நா. தம்பிராசா விசாரணை நடத்திய சமயம் காலமானவர் மூன்று மாதங்களுக்கு முன்னர் தமது தந்தை வந்த சமயம் அவருடன் செல்லப் போவதாக அடம் பிடிக்கவே ஒருவாறு சமாதானம் செய்து வீட்டில் வைத்திருந்ததாகவும், தற்போது தீபாவளிக் கொண்டாட்டத்திற்காவது ஊருக்குப் போக வேண்டுமெனக்கூற முதலில் வீட்டுக்காரர் அதற்கு சம்மதித்திருந்ததாகவும், பின்னர் பிடிவாதத்துடன் வேலை செய்யாமலிருந்ததால் தீபாவளிக்கு வீட்டிற்கு அனுப்ப முடியாது என வீட்டுக் காரர் கூறியதாகவும், இதனால் மனமுடைந்த காலமானவர் ரோசா செடிக்கு தெளிக்க வைத்திருந்த கிரிமிநாசினியை எடுத்து அருந்தியதாகவும் சாட்சியங்களிலிருந்து தெரியவந்தது.

தெல்லிப்பளை அரசினர்வைத்தியசாலை வைத்திய அதிகாரி கலைவாணி உக்கிர பெருவழுதிப்பிள்ளை நஞ்சினுல் மரணம் சம்பவித்ததாக தெரிவித்தார்.

இறுதியில் தற்கொலை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. மயிலிட்டி தெற்கு கிராம சேவையாளர் திரு செ. உலகநாதன் சாட்சியங்களை ஆஜர் செய்தார்.

# பேராசிரியர் சிவத்தம்பி நாடு திரும்பினுர்

[யாழ்ப்பாணம்]

யாழ். பல் கலைக்கழகப் பேராசிரியர் கா. சிவத்தம்பி லண்டன்கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கடந்த இரு மாதங்களாக ஆராய்ச்சி ஒன்றை நடாத்திவிட்டு நாடு திரும்பியுள்ளார்.

'திராவிட இயக்கங்களின் அடிப்படையான கருத்து நிலைகள்' பற்றிய ஆராய்ச்சியிலேயே பேராசிரியர் ஈடுபட்டிருந்தார். [மா]

# கொள்ளையின் எதிரொலி

[பச்சிலைப்பள்ளி]

பளையிலுள்ள பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்தொடர்ந்து கொள்ளையடிக்கப்பட்டுவருவதன் எதிரொலியாக உணவு முத்திரைகளுக்கு மட்டுமே வியாபாரம் செய்வதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனுல் 25 கூட்டுறவு ஊழியர்கள் பதவிகளை இழக்கிறுர்கள். இதற்கும் நிலைமை சரிவராது போனுல் வியாபார நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்படுமாம்.


நீடிக்கப்பட்டுள்ளது

எஸ்-லோன் வீடுகட்டுவோர் சீட்டிழுப்பு.
பிரத்தியேகமாக எஸ்-லோன் பாவனையாளருக்கு

எமது புதிய வாடிக்கையாளர்களும் சீட்டிழுப்பின் அதிர்ஷ்டத்தைப் பெற...



உங்கள் எஸ்-லோன் பி.வீ.சி. குழாய்களும் இணைப்புகளும் முற்றிலும் இலவசம்!

எஸ்-லோன் வீடு கட்டுவோரின் சீட்டிழுப்பில் உங்களுக்கும், உங்கள் வியாபாரிகளுக்கும், ஏன் உங்கள் குழாய்த்தொழிலாளருக்குமே பரிசில்கள் உண்டு.

இது எஸ்-லோன் பாவனையாளருக்கு மூன்று மாதங்கட்கொரு முறை நாம் தரும்பரிசாகும்.

இதோ எஸ்-லோன் பி.வி.சி குழாய் உற்பத்தியாளர்கள் தரும் ஒரு வெகுமதி.

நீங்கள் செய்யவேண்டியதாவது:

1. உத்தரவுபெற்ற எஸ்-லோன் வியாபாரி எவரிடமாவது சென்று எஸ்-லோன் குழாய்களையும் இணைப்புகளையும் வாங்குங்கள்.

2. அக்கொள்வனவுக்குஓர் பற்றுச்சிட்டினையும் அதனை உறுதிப்படுத்தும் ஓர் உறுதிச்சிட்டையும் கேட்டு வாங்குங்கள்.

3. பற்றுச்சிட்டையும் உறுதிச்சிட்டையும் கீழ்க்கண்ட கூப்பனுடன் எமக்கு அனுப்புங்கள்.

நாம் சீட்டிழுப்பு நடத்துவோம். நீங்கள் அதிர்ஷ்டசாலியானுல் உங்கள் உறுதிச்சிட்டிலுள்ள முழுத் தொகையையும் ரொக்கமாக உங்களுக்கே திருப்பித் தருவோம். இதன் மூலம், எஸ்-லோன் தயாரிப்புகளை நீங்கள் முற்றிலும் இலவசமாகப் பெறுவீர்கள்.

பரிசுகள் இதோ:

பிரிவு அ
ரூ. 5000/- முதல் ரூ. 15,000/- வரையிலான கொள்வனவிற்கு 10 பரிசுகள்.

பிரிவு ஆ
ரூ. 2500/- முதல் ரூ. 5000/–வரையிலான கொள்வனவிற்கு 10 பரிசுகள்.

பிரிவு இ
ரூ. 2500/- க்குக் குறைந்த கொள்வனவிற்கு 25 பரிசுகள்.

சிறந்த வடிவமைப்புக்கும் வேலைப்பாட்டுக்கும் குழாய்த்தொழிலாளருக்குரிய சன்மானம் ரொக்கம் ரூ 5000/-
வியாபாரிகளுக்கும் பரிசில்கள் உண்டு.

முக்கியம்:
த மஹாராஜா ஆர்கனைசேஷன் லிமிட்டெட் டினதும் அவர்களது விளம்பர முகவர்களான கெரட்ஸ் அட்வரைசிங் தாபனத்தினதும் ஊழியர்களையும் அவர்களது குடும்பத்தவர்களையும் தவிர்ந்த ஏனைய இலங்கைப் பிரசைகள் அனைவரும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

இக்கூப்பனை பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்;
எஸ்-லோன் வீடுகட்டுவோரின் சீட்டிழுப்பு,
467, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.

பெயர் ____
முகவரி ____
கட்டிடத்தலத்தின் அமைவிடம் ____
குழாய்த்தொழிலாளரின் பெயர் ____
வியாபாரியின் பெயர் ____
முகவரி ____

எஸ்-லோன் குழாய்கள் இணைக்கப்படுவதை நேரிற் சென்று பார்வையிடுவதற்கு மஹாராஜா ஆர்கனைசேஷனின் பிரதிநிதியொருவருக்கு இத்தால் அதிகாரம் அளிக்கப்படுகிறது.
தேதி ____ கையொப்பம் ____

இன்று பி.வி.சி. குழாய்களுள் முதற் தரமானது எஸ்-லோன் ஏன்? ____

S-lon
நிகர் வேறில்லை

முடிவு திகதி 1984 அக்டோபர் 30
விலை ஒரு மீட்டர் 13/05 முதல்

உற்பத்தியாளர்கள்:
த மஹாராஜா ஆர்கனைசேஷன் லிமிட்டெட்

விற்பனை அலுவலகங்கள்:
467, யூனியன் பிளேஸ்,
கொழும்பு-12.

விபரங்களை உங்கள் வியாபாரியிடம் பெறுங்கள்.

GARADS

Today Only
ராஜா (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00 4-30 6-45
James Garner in
THE FAN
(Color)
Story of a great Star

17-10-84 வரை
வின்ஸர் [யாழ்.]
10-30, 2-30, 6-15
ஜெய்சங்கர் - சாவித்திரி
ஜக்கம்மா
(புதிய பிரதி)

மனோகரா (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30. 6-15,
சிவாஜி - தேவிகா
நீலவானம்
தீபாவளி வெளியீடாக
கே.பாலச்சந்தரின்
பூவிலங்கு

சாந்தி (யாழ்நகர்)
10-30, . 2-30, 4-45
THE MOUNTAIN MEN
Colombia Pictures Release

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30,2-00
எம்.ஜி.ஆர்- சரோஜாதேவி
எம். ஆர் ராதா
தாயைக் காத்த தனையன்
(புதிய பிரதி)

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30,2-30.
சிவாஜி - ஜெயலலிதா
பட்டிக்காடா பட்டணமா

ஹரன் (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-30
சிவாஜி, லட்சுமி
தங்கைக்காக
18 முதல்
10-15, 12-30, 2-15, 4-15, 6-00
Bruce lee
DRAGON STRIKES AGAIN
(Colour)

முதல்தர 'திகில்' படம்
றீகல் [யாழ் நகர்]
சில தினங்கள் மட்டும்)
10-30.2-15, 4-30,6-30
VISITING HOURS
விறுவிறுப்புடன் கூடிய திகிலூட்டி திடுக்கிட வைக்கும் இப்படத்தை இருதயம் பலவீனமானவர்கள் பார்ப்பதை தவிர்க்கவும்.
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்.

லிடோ சினிமா
15 முதல் 17 வரை
10-30. 2-30, 6-30
அந்தரங்கம்

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 4-30
THE HOWLING
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்)

## கல்வித்திணைக்களம் வெற்றி

(கல்வியங்காடு)

யாழ். கல்வித் திணைக்கள ஊழியர்களின் உதைபந்தாட்டக்கோஷ்டிக்கும், யாழ்.இந்து கல்லூரி ஆசிரியர்களின் உதைபந்தாட்டக் கோஷ்டிக்கு மிடையேநடைபெற்றபோட்டியில் யாழ். கல்வித்திணைக்கள கோஷ்டி வெற்றியீட்டியது.

யாழ்.இந்துக்கல்லூரி விளையாட்டுமைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில்கல்விப் பகுதி உடற் பயிற்சியாளர்களும், கல்வி அதிகாரிகளும் கல்வித்திணைக்கள உதைபந்தாட்டக் கோஷ்டியில் இடம் பெற்றிருந்தனர்.

## 'வேணுகான நாதவாருதி' அரியநாயகம்

(யாழ்ப்பாணம்)

திரு. எஸ். அரியநாயகம் அவர்களது வேணுகான மழை ஓய்ந்து ஒருமாதகாலம் ஆகிவிட்டது. சங்கீத ஆசிரியராகவும், சிறந்த புல்லாங்குழல் வித்துவானுமாகத் திகழ்ந்த இவரது இழப்பு வேணுகானப் பிரியர்களுக்கு அளப்பரிய இழப்பாகும்.

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் இரத்மலானை இந்துக்கல்லூரி உடப்புசல்லாவை தமிழ்க்கலவன் பாடசாலை, ஒட்டமாவடி தமிழ்க்கலவன் பாடசாலை, நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலை ஆகிய பாடசாலைகளில் சங்கீத ஆசிரியராகச் சிறந்த சேவையாற்றி எல்லோரது நன்மதிப்புகளையும் பெற்றவராவர்.

பாடசாலை தவிர்ந்த நேரங்களிலும் கூட அவரது வாழ்நாட்களை முழுக்க முழுக்க இசைக்கெனவே அர்ப்பணித்தார். தன்னைப்போன்ற பல பெரிய வித்வான்களை உருவாக்கிவிடவேண்டும் எனப் பெரிய ஆசை அவரது நெஞ்சில் இருந்தது. அதற்கேற்பப் புல்லாங்குழலில் உள்ள அழகு நுட்பங்களையெல்லாம் ஒன்றுவிடாமல் தன் மாணவர்களுக்குச் சொல்லிக்கொடுப்பார். அவற்றை அவர்கள் ஒருமுறையிலேயே சரியாக வாசித்துவிட்டால் அவருக்கு ஏற்படும் சந்தோஷத்தைச் சொல்லில் வடிக்க வார்த்தையில்லை. புல்லாங்குழல் சொல்லிக் கொடுப்பது மட்டுமல்லாது புல்லாங்குழல் செய்வதிலும், சுருதி சுத்தமாகச் சுருதிப்பெட்டிகள் தயாரிப்பதிலும் ஒரு தனிச்சிறப்பு அவரிடத்திலிருந்தது. அரியநாயகம் மாஸ்டர் செய்த புல்லாங்குழல், அரியநாயகம் மாஸ்டர் செய்த சுருதிப்பெட்டி எனப் பல இசைப் பிரியர்களும் அவற்றை விருப்புடன் வாங்குவதைப் பலரும் அறிவர். இவையெல்லாம் அவருடைய இசைப்புலமைகளை எடுத்துக்காட்டுகின்றன

இவர் தமது புல்லாங்குழல் கலையை பிரம்மஸ்ரீ மூர்த்தி ஐயர் அவர்களிடத்தில் பலவருடங்களுக்கு மேலாகப் பெற்றார். திரு. எஸ். அரியநாயகம் அவர்களின் இனியபுல்லாங்குழல் இசைச் சிறப்பின் காரணமாக இலங்கை வானொலி நிலையம் இவரது புல்லாங்குழல் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி வந்துள்ளது.

நல்லை ஞானசம்பந்தர் ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ பரமாச்சார்ய ஸ்வாமிகளின் 10-வது பீடாரோகண விழாவின் பட்டமளிப்பு வைபவத்தின் போது ஸ்வாமிகள் இவருக்கு ''வேணுகான நாதவாருதி'' என்ற பட்டத்தையளித்துப் பொன்னுடை போர்த்திக் கௌரவித்துள்ளார்.

அவர் ஏற்றிய தீபங்கள் என்றும் எங்கும் மங்கா ஒளியாகச் சுடர்விட்டுப் பிரகாசிக்க வேண்டும் என வேணுகோபாலனை வேண்டுவோமாக.

துளசி மனோகரி,
திருநெல்வேலி.

## யாழ். கல்விவட்டார தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

இந்த ஆண்டிற்கான யாழ்ப்பாணம் கல்வி வட்டாரத் தமிழ்த்தினப் போட்டி முடிவுகள் வருமாறு:

**பிரிவு 1- தரம் 3, 4**

**வாசிப்பு:** அ இளஞ்சேரன் [புனித ஜோன் பொஸ்கோ], இ.சுகந்தி [புனித மரியாள் வித்தியாலயம்], வீணு மனோகரபூபன் [திருக்குடும்ப கன்னியர் மடம்].

**எழுத்து:** த. தாட்சாயினி (புனித ஜோன் பொஸ்கோ), அஞ்சலா சரோஜினி சில்வெஸ்டர் [திருக்குடும்ப கன்னியர் மடம்], எம். எஸ். ஜபரின் [மஸ்ற உத்தீன் த. க. பா]

**பா ஓதல்:** சந்தியோ யூலியஸ் கொலினு [கன்னியர் மடம் ம. வி.], சி. சியாமளா [புனித ஜோன் பொஸ்கோ], வை தனுஷா [திருக்குடும்ப கன்னியர் மடம்].

**ஆக்கம்:** த. தாட்சாயினி [புனித ஜோன் பொஸ்கோ], ரீ. ஜூலியானு வண். மேற்கு அ. மு. க. பா.]. யோலன்ட் செறோனு [கன்னியர் மடம் ம. வி.]

**பிரிவு 2- தரம் 5, 6**

**வாசிப்பு:** பா. தனுஷா (புனித ஜோன் பொஸ்கோ), ப. பிருந்தா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), ஜெ. பார்த்திபன் (பரியோவான் கல்லூரி).

**எழுத்து:** ம. நெய்த்திரா [கன்னியர் மடம் ம. வி.], ச. சாமினி [புனித ஜோன் பொஸ்கோ], சு. நக்கீரன் [பரியோவான் கல்லூரி].

**பா ஓதல்:** வை. யாதவன் [பரியோவான் கல்லூரி], கீன் வினிபெல் [கன்னியர் மடம் ம. வி], ந. சுஜந்தினி [வேம்படி மகளிர் கல்லூரி],

**ஆக்கம்:** க. ஜெயராதா [கன்னியர்மடம் ம. வி.], ச. சியாமளா [யாழ். மத்திய கல்லூரி], லூயூட் கிறேசியன் [புனித ஜேம்ஸ் ம. வி.]

**பிரிவு 3 - தரம் 7, 8**

**பேச்சு:** சு. கதேசன் [பரியோவான் கல்தூரி], தி. லக்ஷிகா [சுண்டிக்குளி மகளிர் கல்லூரி], சி. சுரேந்திரன் [கொழும்புத்துறை இ.ம.வி ].

**கட்டுரை:** செ. மேரி அன்ரி பிராண்டா [புனித ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயம்], பொ. கவிதா [சுண்டிக்குக்குளி மகளிர் கல்லூரி], சுவர்ணு வியோ [திருக்குடும்ப கன்னியர்மடம்].

**பா ஓதல்:** யோ. நர்தினி [சுண்டிக்குளி மகளிர் கல்லூரி], கி. வாசுகி [புனித மரியாள் வித்தியாலயம்], சூ. கமிலா [திருக்குடும்ப கன்னியர்மடம்].

**ஆக்கம்:** சே. சுனீதா [திருக்குடும்ப கன்னியர்மடம்], பீ. திருமாறன் [பரியோவான் கல்லூரி], இ ம ரவிராஜபுத்திரன் [கொழும்புத்துறை இ. ம. வி].

**பிரிவு 4 - தரம் 9. 10**

**பேச்சு:** கி. சுபத்திரா [கன்னியர்மடம் ம. வி,], அ. மேரியான்சி [பாஷையூர் புனித அந்தோனியார் கல்லூரி], யூ. வரதமனோகரி [புனித ஜேம்ஸ் மகளிர் கல்லூரி].

**கட்டுரை:** தெ. துஷ்யந்தி [சுண்டிக்குளி மகளிர்கல்லூரி], ந. சாந்தினி [கன்னியர் மடம் ம. வி.], து. இராஜபத்மினி [கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்].

**பா ஓதல்:** ஜே. ஜெனிற்ரு பிறேமளா [புனித ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயம்], ஞா. அனுஷியா [வேம்படி மகளிர் கல்லூரி], எம். விக்னேஸ்வரி [கன்னியர் மடம் ம.வி.] சி சுபாஷ் சந்திரன் [கொழும்புத்துறை இ. ம. வி.].

**ஆக்கம்:** அ. அன்ரனிற்ரு [திருக்குடும்ப கன்னியர்மடம்], தே சாந்தி [கன்னியர் மடம் ம. வி.], க. வசுதா [சுண்டிக்குளி மகளிர் கல்லூரி].

**சிறுகதை நாடகம்:** சி. ஜானகி [சுண்டிக்குளி மகளிர் கல்லூரி], ரீ. சதீஸ்குமார் [யாழ். மத்திய கல்லூரி].

## வாழ்க்கைச் செலவுப்படி

(பண்டத்தரிப்பு)

யாழ். சுகாதார திணைக்கள ஊழியர்களுக்கு வாழ்க்கைச் செலவுப் படியாக மாதமொன்றுக்கு 56ரூபாவைகடந்த செப்டம்பர் மாதம் தொடக்கம் வழங்குவதற்கு யாழ். பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

அரசாங்கம் அண்மையில் அறிவித்தற் கிணங்க இந்த 56 ரூபாவாழ்க்கைச்செலவு படியை செப்டம்பர் மாதம் முதலம் திகதி தொடக்கம் கணக்கிட்டு வழங்குவது பற்றிய சுற்றறிக்கையொன்று கடந்த வாரம் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் தொடக்கம் வழங்கப்பட்டுவரும் 102ரூபா வாழ்க்கைச் செலவுப் படியுடன் சேர்ந்து இந்த 56 ரூபாவும் வழங்கப்பட விருப்பதாக அறியப்படுகின்றது,

## கயரோகத் தடுப்புஊசி

(கல்வியங்காடு)

ஆறுயிரத்துக்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கு இவ் வருடம் இதுவரை காலஎல்லையுள் கயரோகத்தடுப்பு ஊசி ஏற்றப்பட்டுள்ளதாக இலங்கைதேசிய கயரோகத்தடுப்புச் சபையின் யாழ் கிளையின் செயலாளர் டாக்டர் எம் ஜி. தில்லைநாயகம் தெரிவித்தார்.

இ.தே.க.த. சபையின் யாழ் கிளை யாழ்.நகரத்தில் உள்ள பாடசாலைப் பிள்ளைகள் ஐயாயிரம் பேருக்கு கல்விப்பகுதி சுகாதார உத்தியோகத்தர் உதவியுடன் கயரோகத்தடுப்பு ஊசிகளை ஏற்றியுள்ளதாகவும் யாழ்நகரில் உள்ள பொம்மை, வெளி பாஷையூர்நல்லூர் ஆகிய இடங்களில் உள்ள பிள்ளைகள் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு தடுப்பு ஊசி ஏற்றியுள்ளதாகவும் இவ்வருட முடிவுக்குள் மேலும் பல ஆயிரம் பிள்ளைகளுக்கு இம் மருந்து கொடுக்க யாழ் மாநகர சபையின் சுகாதாரப் பகுதியின் உதவியுடன் செயல் பட்டுக் கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

## பரு. ஹாட்லி கல்லூரிக்கு நூல்கள் சேகரிக்க 'லயன்ஸ்' நடவடிக்கை

(புலோலி)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் நூலகப்புனரமைப்புக்கருதி பருத்தித்துறை லயன்ஸ் கழகம் அக்டோபர் மாதத்தை நூல்கள் சேகரிக்கும் மாதமாகப் பிரகடனப் படுத்தியுள்ளது.

லயன்ஸ் கழகத்தின் நூலக மாதத்தையொட்டி கல்லூரியின் உயர் வகுப்பு மாணவர்களையும், பழைய மாணவர்களையும், பல்கலைக் கழக மாணவர்களையும் நூல்களைப் பொது மக்களிடமிருந்து சேகரிப்பதில் லயன்ஸ் கழகம் ஈடுபடுத்துகின்றது. இக்குழுவினர் லயன்ஸ் கழக அட்டைகளுடன் பல் வேறு பகுதிகளிலும் நூல்களைச் சேகரிப்பர்.

கல்லூரி நூலகத்தின் தேவைக்கு அதிகமாகச் சேகரிக்கப்படும் நூல்கள் மீண்டும் உரியவர்களிடம்ஒப்படைக்கப்படும்.

இக்கல்லூரியின் நூலகத்திற்கு நூல்களை வழங்க விரும்புபவர்கள் டாக்டர் எம். கே. முருகானந்தன் தலைவர் லயன்ஸ் கழகம் பருத்தித்துறை என்னும் முகவரியுடன் நேரிலும் கடிதமூலமும் தொடர்புகொள்ளலாமென்றும் கேட்கப்பட்டுள்ளனர்.

## ஈச்சமோட்டை இளைஞர் கழகம் வெற்றி

[யாழ்ப்பாணம்]

கொய்யாத்தோட்டம் சன சமூக நிலைய கரபந்தாட்டக் கோஷ்டிக்கும், ஈச்சமோட்டை இளைஞர் கழக அணிக்குமிடையில் அண்ணமலை விளையாட்டரங்கில் நடைபெற்ற கரபந்தாட்டப்போட்டியில் 8 க்கு15, 15 க்கு 02, 15 க்கு 11 என்ற முறையில் புள்ளிகளைப்பெற்று ஈச்சமோட்டை இளைஞர் கழக அணி வெற்றி பெற்றது.

ஈச்சமோட்டை இளைஞர் கோஷ்டிக்கு திரு எஸ். சந்தியாப்பிள்ளையும், கொய்யாத் தோட்டக் கோஷ்டிக்கு திரு சின்னராசா விசயனும் தலைமை தாங்கினர். சுப்ரன்டீ ஏ. எம்.குணசிங்கம் மத்தியஸ்தராகக்கடமையாற்றினர்.

## சுடலை பாதிப்பு

(கல்வியங்காடு)

அரியாலைப் பகுதியில் ''மணல்'' அள்ளுவதற்குத் தடைசெய்யப்பட்டுள்ளபோதிலும் அரியாலை கிழக்கிலுள்ள சுடலையைச் சுற்றி மணல் அள்ளப்படுகின்றது இதனால்சுடலை பெரும்பாதிப்புக்குள்ளாகி வருகிறது. இதுசம்பந்தமாக இச் சுற்று வட்டாரப் பொதுமக்கள் அதிகாரிகளுக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

## யாருடையது?

யாழ். அரசினர் வைத்திய சாலையில் யாழ். பல்கலைக்கழக மாணவன் ஒருவரால் கண்டு எடுக்கப்பட்டு ஆஸ்பத்திரி சுப்பிரிண்டனால் ஒரு லேடீஸ் பேர்ஸ் பணத்துடன் ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கபட்டுள்ளது. புலோலி கிழக்கு தும்பளைவீதி இராசரத்தினம் சற்குணராசாவின் அடையாள அட்டையை திரு கா செல்வரத்தினமும், புலோலிமேற்கு பருத்தித்துறை வீதியைச் சேர்ந்த திரு. வேலயுதம் கதிரவேல்பிள்ளையின் அடையாள அட்டையை திரு ப. பாலராஜாவும் கண்டு எடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளனர். உரியவர்கள் தகுந்தஅத்தாட்சிகாட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

## சங்காபிஷேகம்

[ஊரெழு]

உடுப்பிட்டி இமையாணன் அருள்மிகு கும்பவாழி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்றுசங்காபிஷேக வைபவம் சிறப்பாக நடைபெற்றது.

ஆலயத்தின் பிரதமகுரு சிவஸ்ரீ.சி. சோமஸ்கந்தக் குருக்களும் வல்வை அருள்மிகு முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதம குருவும் அர்ச்சகர் சங்கத் தலைவருமான சிவஸ்ரீ சிதண்டாயுதபாணி தேசிகரும் கலந்து கொண்டு நடாத்திவைத்த மேற்படி சங்காபிஷேகத்தில் 1008 சங்குகள் வைத்து விநாயகப் பெருமானுக்கு அபிஷேகமும் பூசைகளும் நடத்தப்பட்டன.

கரணவாய் கலாவதி மரணவிசாரணை :

# பீரங்கியிலிருந்து வந்த குண்டின் பாகங்களா?

## இரசாயனப்பரிசோதனைக்குஅனுப்பப்பணித்ததாக சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

''உலோகத் துண்டுகள் ஒரு பெரிய பீரங்கியிலிருந்து வெளிப்பட்ட குண்டின் பாகங்களா? அல்லது கையால் வீசப்படும் குண்டின் பாகங்களா? அல்லது தோட்டாக்களின் பாகங்களா? என்று சான்றுப் பொருட்களை நீதிமன்றத்தில் பாரப்படுத்தி இரசாயனப் பரிசோதனைக்கு அனுப்பி அறிக்கை கோரும்படி பொலிசாரிடம் பணித்தேன்''

கரணவாய் கலாவதி மரண விசாரணையில் நேற்று சாட்சியமளித்த காங்கேசன்துறை உதவி பொலிஸ் அதிபர் லோறன்ஸ் அமரசேன மேற்கண்டவாறு கூறினர்.

யாழ். நீதிமன்றத்தில் நீதிபதி எஸ். நாகராசா முன்னிலையில் இவ் விசாரணை நடைபெற்றது.

நீதிமன்ற வளவிற்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. யாழ் உதவி பொலிஸ் அதிபர் திரு. மனோகரன் வல்வெட்டித்துறை சார்ஜன் பூவிலிங்கம் சமூகமளித்திருந்தனர்.

உதவிப் பொலிஸ் அதிபர் அமரசேன சாட்சியத்தில் மேலும் கூறியதாவது:

84 செம்டம்பர் 1ம் திகதி நான் காங்கேசன்துறை உதவி பொலிஸ் அத்தியட்சகராக கடமையாற்றினேன். வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவை மேற்பார்வைசெய்து வந்தேன். செப்டம்பர் 16ம் திகதி வல்வெட்டித்துறை பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி கலாவதி எனப்படும் பெண் யாழ் அரசினர் வைத்தியசாலையில், குண்டுவெடிப்பின் காரணமாக ஏற்பட்ட காயங்ளுடன் அனுமதிக்கப்பட்டு இறந்துவிட்டதாகவும், இறந்த பெண், வீட்டில் கணவனுடன் படுத்திருந்தபோது காயங்கள் ஏற்பட்டதாகவும் கணவனும் காயங்களுடன் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கபட்டுள்ளதாகவும் கூறினர்.

இறந்தவரின் மைத்துனர், சம்பவம் நடந்த இடத்தில் எடுக்கப்பட்ட சில லோகத் துண்டுகளை வைத்தியசாலையில் கொடுத்தாரென்றும் கூறினர்.

வல்வெட்டித்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி அனுபவம் குறைந்தவர். இப்போதுதான் முதல்முதலாக பொறுப்பதிகாரி பதவி ஏற்றுள்ளார். அவருக்கு தமிழ் தெரியாது.

இம் மரணத்தை அவசரகாலச் சட்டத்தின் கீழ் கொண்டுவர முடியாதென்றும் ஏனெனில் பாதுகாப்பு படையினரிடமிருந்து தங்களது நடவடிக்கையால் இம் மரணம் ஏற்பட்டதென்று அவசரகாலசட்டத்தின்கீழ் தகவல் கிடைக்கவில்லையென்றும் கூறினேன். பின் வல்வெட்டித்துறை பொலிஸ்நிலையபொறுப்பதிகாரியிடம் விசாரித்தபோது ஒரு அறிக்கை தமிழில் தயாரிக்கப்படவேண்டுமென்றும் அந்தப் பொறுப்பை சார்ஜன்ட் பூவிலிங்கத்திடம் ஒப்படைப்பதாகவும் கூறினர்.

விசாரணை இம்மாதம் 29ம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டுள்ளது.

---

கடற்படை கைப்பற்றிய

## இந்தியப்படகுகளை திருப்பி ஒப்படைக்க உத்தரவு

(கொழும்பு)

வடபகுதியில் 10 மாதங்களுக்கு முன்னர் கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட இந்திய மீனவர்களின் நான்கு வள்ளங்களையும் உரியவர்களிடம் திருப்பி ஒப்படைக்குமாறு கடற்றொழில் அமைச்சர் திரு. பெஸ்டஸ்பெரேரா தமது அமைச்சின் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். இந்திய தூதராலய சட்ட ஆலோகர் சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம், இந்திய தூதரக அதிகாரி திரு ஏபிரகாம் ஆகியோர் அமைச்சரைச் சந்தித்து குறிப்பிட்ட வள்ளங்கள் பழுதடைந்து வருவதாகவும் அவற்றின் சொந்தக்காரர்கள் பெரிதும் கஷ்டப்படுவதாகவும் கூறினர்கள். இதனைத்தொடர்ந்து அமைச்சர் மேற்படி உத்தரவை பிறப்பித்துள்ளார்.

---

## அரச செயலக சிற்றூழியர் குறைபாடுகள்

(வண்ணார்பண்ணை)

யாழ்ப்பாணம் அரசாங்க செயலக சிற்றூழியர்களின் கஷ்டங்கள், குறைபாடுகள் பற்றி ஆராயும் ஆலோசனைக் கூட்டம் ஒன்று அடுத்தவாரம் யாழ்ப்பாண அரசாங்க செயலகத்தில் நடைபெறவிருக்கிறது.

அரசாங்க பொதுச்சேவைத் தொழிலாளர் சங்கத்தின் வேண்டுதலுக்கமைய யாழ் அரசாங்கஅதிபர் இந்த ஆலோசனைக்கூட்டத்தை நடத்த ஏற்பாடுசெய்துள்ளார்.

அரசாங்க பொதுச்சேவைத் தொழிலாளர் சங்க யாழ். கிளைச் செயலாளர் திரு.சி.சி. வரதராசா ஊழியர்களது குறைபாடுகள், கஷ்டங்கள் பற்றிய மகஜர் ஒன்றை இப் பேச்சுவார்த்தைக்கு சமர்ப்பித்துள்ளார். மேற்படி தொழிற் சங்கப் பிரமுகர்களும், அரசாங்க அதிகாரிகளும் இக்கூட்டத்தில் இக்குறைபடுகள் பற்றி ஆராயவுள்ளனர்.

---

நெடுங்கேணியில்

## யானைகளின் அட்டகாசத்துக்கு இருவர் பலி; 6 வீடுகள்சேதம்!

[வவனியா]

நெடுங்கேணியில் யானை தாக்கி இருவர் மரணமாகியுள்ளனர். ஒலுமடு, பட்டிக் குடியிருப்பில் இச்சம்பவம் நடந்துள்ளது. ஆறு வீடுகள் முற்றுகச் சேதமடைந்துள்ளன.

60 வயதான வயோதிபர் ஒருவரும், ஒலுமடுவைச் சேர்ந்த எஸ் தேவன் (30 வயது) என்பவருமே காட்டு யானை தாக்கி மரணமாகியுள்ளனர்.

இதுதொடர்பாக வவனியா இ தொ. கா. கிளை காரியாலயத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது.

அரசாங்க உயர்மட்ட அதிகாரிகளுக்கும் இது பற்றி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

காட்டுயானைகளை விரட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

---

## பிரதிஅமைச்சர் ஆஸ்பத்திரியில்

(மட்டக்களப்பு)

கிராமிய அபிவிருத்தித் துறை பிரதியமைச்சர் ஜனப் பரீத்மீரான்லெப்பை சுகயீனம் காரணமாக மட்டக்களப்பு அரசினர் ஆஸ்பத்திரியின் அவசரசிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

---

## மரண அறிவித்தல்

### சீவரெட்ணம்:- மைக்கேல் சாமுவேல்

கோண்டாவில் சீவரெட்ணம் மைக்கேல் சாமுவேல் (14-10-84)ல் காலமானர். இவர்காலம்சென்ற சுகிர்தம்மாவின் அன்புக்கணவரும் கரிச்சந்திரன் (U K) இராசேந்திரன் (கோண்டாவில்) தெய்வேந்திரன் (அவுஸ்திரேலியா) இவர்களி அன்புத்தந்தையும், மலர், இராசமலர், ஜெயராணி இவர்களின் மாமனும், மோகன், சாமினி, காமினி, நந்தினி டானியல், ஜெயந்திரன், ஜெயக்குமார், இவர்களின் பேரனுமாவர் மரண ஆராதனை பற்றியவிபரம் பின்பு அறிவிக்கப்படும் உற்றூர் உறவினர் நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும். (234)

---

## கிளிநொச்சி வந்துள்ள அகதிகள்

(கிளிநொச்சி)

அகதிகள் புனர்வாழ்வுத் திட்டத்தின்கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் அகதிகளை குடியமர்த்தும் முதல்நடவடிக்கையாக நேற்று வவனியா பெரியகட்டு அகதி முகாமிலிருந்து 42 குடும்பங்கள் கிளிநொச்சியை வந்தடைந்தன.

கிளிநொச்சி மாவட்ட காணிக்கந்தோரை வந்தடைந்த இவர்கள் வன்னேரிக் குளம் பகுதியில் குடியமர்த்தப்படவுள்ளனர்.

---

## இப்படியும் நடக்கிறது

ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பார்கள்.

இது இப்பொழுது பொய்த்து விட்டது போல் தெரிகிறது.

ஊர் ஒன்று பட்டால், கூத்தாடிக்குத் திண்டாட்டம் என்று ஆகிவிட்டது!

வீட்டு வளவு, முன்வீதி, சிறிய ஒழுங்கைகள் போன்றவற்றைத் துப்பரவு செய்வது முதல் வீட்டு வளவில் கீரை, கத்தரி, தக்காளி, வெண்டி மற்றும் மரவள்ளி போன்றவற்றை பயிரிட்டு, உடனடி உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதில் ஊர்மக்கள் இப்பொழுது கவனம் செலுத்தி வருகின்றனர்.

மழைக்காலம் வெள்ளம் வரலாம். தாழ்ந்த பகுதிகளில் நீர் தேங்கிநின்று, அதன்மூலம் கொடிய நோய்களும் வரலாம் என்பதைக் கருத்திற் கொண்டோ தெரியவில்லை; 'சும்மா' மழை பெய்தாலும் வெள்ளம் 'ஓகோ' என்று வரும் கொக்குவில் பகுதியில் சிரமதானம்மூலம் இளைஞர்கள் - ஊர்மக்கள் பெரும் கால்வாய் ஒன்றைத் திறம்பட சுத்தம் செய்து, வெள்ளம் தேங்கி நிற்காமல் வழி செய்திருப்பது......ஊர் மக்கள் ஒன்று பட்டால் என்பதற்கு மற்றுமோர் உதாரணமாகும்.

— 'ஊடுருவி'

---

## வடபகுதி மீனவர் கடற்றொழில் பாதிப்பு

(ஏ. வி. மாணிக்கம்)

வடபகுதி கடற்பிராந்தியத்தில் இராக்காலங்களில் ஊரடங்குச்சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளதால், மீனவர்களின் ஜீவாதாரமான கடற்றொழில் வெகுவாகப்பாதிக்கப் பட்டுள்ளது.

வடகீழ்ப்பருவப் பெயர்ச்சிக் காற்று (வாடைக்காற்று) வீசும் பருவகாலம் ஆரம்பமானதைத் தொடர்ந்து கண்காணிப்பு வேலைகள் துரிதமாக மேற்கொள்வது வடபிராந்தியக் கடற்பகுதியில் சிரமம் ஏற்படுத்துவதாக இருக்காலாம் என்றும், தீவிரவாதிகளின் நடமாட்டங்களை அறவே ஒழிப்பதற்கு கடற்பகுதியில் இரவு ஊரடங்குச்சட்டம் பிறப்பித்திருக்கலாம் என்றும் அவதானிகள் கருதுகின்றனர்.

இரவு வேளைகளில் கடல் பகுதியில் பிடிக்கப்படும் மீன் வகைகளே காலைநேரங்களில் பாவனையாளர்களுக்கு விற்பனைக்கு வருகின்றன. இதனல் பாவனையாளர்கள் உரிய விலைகொடுத்து கடல் உணவுப் பொருட்களைப் பெற்றுவந்தனர்.

கடல் ஊரடங்குச்சட்டம் இரவில் அமுல்செய்யப்படுவதால் இனிமேல் பாவனையாளர்கள் காலைநேரங்களில் தரமான கடல் உணவைமட்டுமல்ல, கருவாடுவகைகளைக் கூடப்பெறமுடியாத நிலைஏற்பட்டுள்ளது. (மா)

---

## பணிப்பாளர்

(வவனியா)

வவனியா கல்வி மாவட்ட பிரதேச பதில் கல்விப் பணிப்பாளராக கவிஞர் இ. முருகையன்பதவி ஏற்றுள்ளார்.

வவனியா கல்விப் பணிப்பாளராக கடமைபுரிந்த திரு. சி. பொ. சிவபாதம் ஓய்வு பெற்றுள்ளார்.

---

## மரணஅறிவித்தல்

### கார்த்திகேசு மார்க்கண்டு

கோண்டாவில் கிழக்கு கார்த்திகேசு மார்க்கண்டு 95வது வயதில் 15-10-84 காலை 8-30 மணிக்கு காலமானர். இவர் காலம்சென்ற அன்னமுத்துவின் அன்புக் கணவரும் சரஸ்வதி, மகேஸ்வரி, செல்வரத்தினம் (இளைப்பாறிய தபாலதிபர்), காலம்சென்ற வீரசிங்கம் (றஞ்சன் ரூன்ஸ்போட்), துரைராஜா (காப்புறுதி கூட்டுத்தாபனம்), சேனுதிராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலம்சென்ற சுப்பிரமணியம் (லீலா ஸ்டோர்ஸ், காலி), காலம்சென்ற அரசறட்ணம் (தொழில் இலாகா), மகேஸ்வரி, சிவஞானம்மா, சிவலோகேஸ்வரி புஷ்பராணி (அரசினர் வைத்தியசாலை, அக்கரைப்பற்று) ஆகியாரின் அன்பு மாமனும் சுந்தரலிங்கம் (மின்சாரசபை ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்), திரு. திருமதி கணேசன், திரு. திருமதி பாஸ்கரன், திரு. திருமதி ஆனந்தலிங்கம், திரு. திருமதி சோதிநாதன், திரு திருமதி பரதராஜா(U K), செல்வன் யோகலிங்கம் (U. S. A), செல்வி கருணாதேவி, திரு. திருமதி சிவசுப்பிரமணியம், திரு. திருமதி சிறீரங்கநாதன். திரு. திருமதி யோகநாதன், சிறீஸ்கந்தராஜா, சூரியகுமார், திருச்செல்வம், செல்விகள் ஜெகதாம்பிகை (மக்கள் வங்கி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்), சோபனா, ஜமுனா லங்கா (ஆயுர்வேத கல்லூரி யாழ்ப்பாணம்), திரு. திருமதி தர்மேந்திரன், ரவீந்திரன், ரவிரஞ்சன் (ஜேர்மனி), ரவிச்சந்திரன் (U. S. A), ரஞ்சனுதேவி, ராகினிதேவி, ரமணிதேவி. பகீரதன். மயூரதன், கிரிதரன், கோணேஸ்வரன், ஆரணி, மதிலோகி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் இறுதியைக் கிரியைகள் இன்று (16-10-84) செவ்வாய்க்கிழமை 'லீலா வாசம்', கோண்டாவில் கிழக்கில் நண்பகல் 12 மணியளவில் நடைபெறும். உற்றூர், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். 246

---

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News paper at the General Post office Sri Lanka under Eelanadu B 100236/81 Eelanadu P. O. Box 49, Telegramnumber Telephone 22389 - 24126.